# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1689/14 - 2011 ජනවාරි 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.01.20

*1689/14 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## *பகுதி IV (அ) - மாகாண சபைகள்*

### *மாகாண சபை அறிவித்தல்கள்*

**ஊவா மாகாணத்தின் மாகாண சபை**

**ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு தொடர்பான நியதிச் சட்டம்**

*இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண சபையால் 2010 திசம்பர் மாதம் 09 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2010 திசம்பர் 24 ஆம் திகதி கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவரது கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.*

*கே. டி. சிறிசேன,*
*மாகாண சபை செயலாளர்,*
*ஊவா மாகாண மனகாண சபை.*

*ஊவா மாகாணத்தின் மாகாண சபை செயலாளர் அலுவலகம்,*
*ராஜ வீதி,*
*பதுளை,*
*2011 ஜனவரி மாதம் 05 ஆம் திகதி.*

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## ஊவா மாகாணத்தின் மாகாண சபை

### ஊவா மாகாண, மாகாண சபையின் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச்சட்டம்

ஊவா மாகாணத்தில் வாழும் மக்களுக்கு நியாயமானதும் நேர்மையானதுமான சேவையை வழங்குவது ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் பொறுப்பு என்பதால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு சட்டத்தின் பதிமுன்றாம் திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி ஊவா மாகாணத்திற்குள் திறன்மிக்கதும், பலன்தரக்கூடியதுமான கூட்டுறவு முறையை நிருவும் குறிக்கோளுடன் கூட்டுறவு பணியில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்களையும் மற்றும் அதிகாரிகளை நியமித்தல், பதவி உயர்த்தல், பணிநீக்கம் செய்தல், ஒழுக்கத்தை பேணுதல், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குதல், போன்றவைகளை நிறுவுவதற்கு தேவையான சட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கும், அதனுடன் இணைந்த விடையங்களுக்கான நியதிகளை உருவாக்கவதற்கான நியதிச்சட்டமாகும் இது. இந்த நியதிச்சட்டம் 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கம் கொண்ட கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சட்டத்திற்கும் மற்றும் அதற்காக ஏற்படுத்தப்பட்ட திருத்தங்களுக்கும் ஏற்புடையதாகும்.

முகவுரை. செயற்றிடனுடன் பலனளிக்கக்கூடியதுமான நம்பிக்கையுடைய சிறந்த கூட்டுறவு பணியை முன்னெடுத்து செல்வதனூடாக ஊவா மாகாண மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு ஊவா மாகாணத்தின் மாகாண சபை கடமைப்பட்டிருப்பதால்;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண சபை இவ்வாறு பிரகடனப்படுத்துகிறது.

சுருக்கப் பெயர். 1. இந் நியதிச்சட்டம் 2010 இலக்கம் 4 கொண்ட ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச்சட்டம் என அழைக்கப்படும்.

செயற்படும் திகதி. 2. இந் நியதிச்சட்டத்தின் இதன் பின் "ஆளுனர்" என அழைக்கப்படும் ஊவா மாகாண ஆளுனர் அவர்களின் அங்கீகாரம் அளிக்கப்பட்ட நாளிலிருந்து அல்லது ஆளுனர் அவர்களின் நிர்ணயிக்கப்பட்ட நாளிலிருந்து அமுலுக்கு வரும்.

## I ஆம் பகுதி

### ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவை நிறுவுதலும், அதன் அதிகாரங்களும் செயற்பாடுகளும்

ஊவா மாகாண கூட்டுறவு ஆணைக் குழுவை நிறுவுதல். 3. இந் நியதிச்சட்டத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்காக இதன் பின் "ஆணைக்குழு" என அழைக்கப்படும் ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நிறுவப்படும்.

சட்டத்துடன் இணைந்த கூட்டுத்தாபனமாக இருத்தல் வேண்டும். 4. ஆணைக்குழு பிளவுபடாத சந்ததியாகவும் பொது முத்திரையுடனான, சட்டபூர்வமான கூட்டுத்தாபனமாகவும் அதன் சட்டத்துடன் இணைந்திருப்பதுடன், அந்த நிலையிலிருந்து அது வழக்கு தொடுப்பதற்கும், அதற்கு எதிராக வழக்கு தொடுப்பதற்கும், மற்றும் வழக்கு தொடுக்கக்கூடியதுமானதாகவும் இந் நியதிச்சட்டத்தின் ஊடாக செய்யவேண்டிய அனைத்தையும் செய்வதற்குமான அதிகாரமுடையதாகவும் சட்டத்துடன் இணைந்ததாக இருத்தல் வேண்டும்.

ஆணைக் குழுவின் சேர்வுகள். 5. (1) ஆணைக்குழுவுக்கு இதன் பின் "அமைச்சர்" என அழைக்கப்படும் ஊவா மாகாண கூட்டுறவு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்படும் மூவர் உள்ளடக்கப்பட்டிருக்கவேண்டும்.

(2) எவரேனும் ஒருவர்;

(அ) கூட்டுறவு சங்க ஊழியராக அல்லது முன்னால் ஊழியராக இருந்தால் அல்லது,

(ஆ) அமைச்சரின் கருத்தின்படி கூட்டுறவு ஊழியர்களின் சம்பளம், ஊதியம் அல்லது சேவையை அடிப்படையாகக் கொண்டு நிபந்தனைகளை அமைக்கும் குறிக்கோளுடன் நடாத்தப்படும் தொழிற்சங்க அங்கத்தவராக இருக்கும் ஒருவராக இருந்தால் அல்லது,

(இ) கூட்டுறவு சங்க சட்டத்தின்படி கூட்டுறவு சங்கத்தில் தற்போது பதவிவகிப்பவர், அல்லது பதவி வகித்தவர் ஒருவராக இருந்தால் அல்லது,

(ஈ) மனநிலை பாதிக்கப்பட்ட அல்லது சொத்து நஷ்டத்தை எதிர்கொண்ட அல்லது தண்டனை கோவை அடிப்படையில் அல்லது இலஞ்ச ஊழல் சட்டத்தின் அடிப்படையில் குற்றவாளியாக நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்ட ஒருவராக இருந்தால் அல்லது,

(உ) தற்சமயம் பாராளுமன்ற உறுப்பினராக அல்லது மாகாண சபை உறுப்பினராக அல்லது உள்ளூராட்சி மன்றத்தில் உறுப்பினராக பதவி வகிக்கும் ஒருவராக இருந்தால் அல்லது,

(ஊ) கூட்டுறவு சங்கங்கத்தில் மற்றும் கூட்டுறவு ஊழியர்களின் சட்ட நடவடிக்கை தொடர்பாக ஆஜராகிய அல்லது ஆஜராகும் சட்ட பிரதிநிதியாக அல்லது ஒழுக்கத்தை பரிசீலிக்கும் அதிகாரியாக அல்லது மேன்முறையீட்டை பரிசீலிக்கும் அதிகாரியாக இருந்தால் அல்லது,

(எ) கூட்டுறவு விடயம் தொடர்பான அமைச்சில் அல்லது திணைக்களத்தின் ஊழியராக இருந்தால் அல்லது,

அந் நபர் கூறப்பட்ட ஆணைக்குழுவில் அங்கத்தவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது இதற்கு மேலும் அங்கு பணி புரிவதற்கு பொருத்தமற்றவராக இருத்தல் வேண்டும்.

(3) கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்படும் அங்கத்தவர்களில் இருவர் அரச சேவையில் ஓய்வுபெற்ற வட்டார மட்டத்திலான பதவியை வகித்த அதிகாரியாக இருத்தல் வேண்டும். அத்தோடு அவர் கூட்டுறவு துறையை பற்றிய அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.

6. (1) ஆணைக்குழுவின் அனைத்து உறுப்பினரும் அமைச்சரின் விருப்பு இருக்கும் வரை அல்லது ஆகக்கூடியது மூன்று வருடங்கள் பதவி வகிக்க வேண்டும். உறுப்பினரின் பதவிக்காலம்.

(2) ஆணைக்குழுவின் எவரேனும் ஒரு உறுப்பினரை அல்லது அனைத்து உறுப்பினரையும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பதவி விலக்க அமைச்சருக்கு உரிமையுண்டு.

(3) எவரேனும் ஒரு உறுப்பினர் பதவி விலகினால் அல்லது இறந்து போனால் அல்லது அமைச்சரால் முன்னர் விலக்கப்பட்டிருந்தால் அல்லது மேலே 5 (2) உப விதியின் படி தகுதியற்றவராக இருந்ததால், ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கான உரிமை அமைச்சருக்கு உண்டு. அவ்வாறு நியமிக்கப்படும் உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் முன்னர் இருந்த உறுப்பினரின் அல்லது உறுப்பினர்களின் பதவி காலத்தின் எஞ்சிய காலத்திற்கு மாத்திரம் பதவி வகிக்கக்கூடியராவர்.

(4) ஒருமுறை ஆணைக்குழுவின் உறுப்பினராக பணிபுரிந்தவரை மீண்டும் அதன் உறுப்பினராக நியமிக்கப்படலாம்.

7. (1) அமைச்சர் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் ஒருவரை அதன் தலைவராக நியமிக்கப்படவேண்டும். தலைவராக வரும் எல்லா சந்தர்ப்பத்திலும் அவர் ஆணைக்குழு கூட்டங்களில் தலைமைத்துவத்தை வகிக்க வேண்டும். தலைவர் சமூகமளிக்காத பட்சத்தில் சமூகமளித்த உறுப்பினர்களில் ஒருவர் தலைமைத்துவத்தை ஏற்கலாம். தலைவர் மற்றும் ஆணைக்குழுவின் பணிகளை மேற்கொள்ளல்.

(2) ஆணைக்குழு சபை கூட்டத்திற்கு இரு உறுப்பினர்கள் சமூகமளித்தல் போதுமானதாக கருதப்படும்.

(3) இரு உறுப்பினர்கள் மாத்திரம் சமூகமளிக்கும் சந்தர்ப்பத்தில் ஒரு தீர்மானத்துக்கு வர முடியாத வேளையில் அவ் விடயத்தை ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்கள் சமூகமளித்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(4) ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களும் சமூகமளித்த கூட்டத்தில் ஏதாவது ஒரு விடயத்தில் எடுக்கப்பட வேண்டிய தீர்மானத்தில் உறுப்பினர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு காணப்படின் பெரும்பான்மையின் கருத்திற்கேற்ப தீர்மானம் எடுத்தல் வேண்டும். ஆனால் உறுப்பினர்கள் சமமாக இருந்தால் தீர்மான வாக்கை தலைவர் அளிக்க உரித்துடையராவர்.

(5) ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கிடையில் பதவி வெற்றிடங்கள் இருப்பதால் அல்லது நியமிப்பது தொடர்பான குறைபாடு காரணமாக அல்லது இக்காரணங்களால் ஆணைச்சபை எடுக்கும் தீர்மானங்கள், அல்லது விதிக்கப்படும் உத்தரவுகள் மற்றும் எந்தவொரு நிபந்தனையும் இரத்துச் செய்யக்கூடாது. இல்லாவிடின் இரத்துச்செய்யப்படுவதாக கருத்தில் கொள்ளக்கூடாது.

(6) இந்த நியதிச்சட்டத்தில் அல்லது அதனடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு கட்டளையில் நிபந்தனைகள் விதிக்கப்படாத விடயம் தொடர்பாக ஆணைக்குழு அதன் செயல்முறைமையை நெறிப்படுத்தலாம்.

8. ஊவா மாகாண மாகாண சபையின் நிதி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சரின் சம்மதத்துடன் ஆணைக்குழுவின் தலைவருக்கும் அங்கு ஊழியர்களுக்கும் செலுத்தவேண்டிய ஊக்குவிப்பு மற்றும் கொடுப்பனவுகளை அமைச்சர் நிர்ணயிக்கவேண்டும். உறுப்பினர்களுக்கு ஊதியம் செலுத்துதல்.

*செயலாளர் மற்றும் ஏனைய ஊழியர்கள்.*

9. (1) ஆணைக்குழுவில் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும், அவர் இலங்கை நிர்வாக சேவையில் IIம் தரத்திற்கு குறையாத நிலையில் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவிற்கு ஏனைய ஊழியர்களை மாகாண அரச ஊழியர்களிலிருந்து தெரிவு செய்யப்படவேண்டும்.

*ஆணைக்குழு உறுப்பினர்களினதும் ஊழியர்களினதும் உத்தியோகபூர்வ சத்தியப்பிரமாணம்.*

10. (1) ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டவர்கள் தங்களின் பணியை ஆரம்பிக்க முன் இங்கு ஊவா மாகாண உயர்நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் இந்த நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உப விதி இலக்கம் 01 இன் படி சத்தியப்பிரமானம் செய்து கொள்ளவேண்டும் அல்லது உறுதியளிக்க வேண்டும்.

(2) செயலாளர் மற்றும் ஊழியர் குழாமின் ஏனைய அதிகாரிகள் ஆணைக்குழுவின் தலைவர் முன்னிலையில் இந்த நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உப விதி இலக்கம் 2 இன் படி சத்தியப்பிரமானம் செய்து கொள்ள வேண்டும் அல்லது உறுதியளிக்க வேண்டும்.

*ஆணைக் குழுவின் அதிகாரங்கள்.*

11. ஆணைக்குழுவிற்கு கீழ்க் காணும் அதிகாரங்கள் இருத்தல் வேண்டும்.

(1) கூட்டுறவு சங்கங்களுக்கு அனைத்து ஊழியர்களை சேர்த்துக்கொள்ளல் மற்றும் மேம்படுத்துவதற்கான தொழில் நிபந்தனைகள் மற்றும் அடிப்படையான கொள்கை உள்ளடக்கப்பட்ட காரிய கிரமங்களை நிர்ணயித்தல்.

(2) தேவையான நேரத்தில் கூட்டுறவு சங்க ஊழியர்களை சேர்த்துக்கொள்வதற்கான பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் அவ்வாறான பரீட்சை நடாத்தப்படும் சபைகளை தெரிவு செய்தல் மற்றும் அவ்வாறான பரீட்சைக்கான கட்டணத்தை நிர்ணயித்தல்.

(3) கூட்டுறவு சங்கத்தில் எந்தவொரு பதவிக்கும் நியமனம் செய்வதற்கு இருக்கவேண்டிய தகுதிகளை நிர்ணயித்தல், எந்தவொரு வகுப்பிற்கும் அல்லது தரத்தின் பதவிக்கு, அல்லது தரத்திற்கான சம்பள முறைமையை நிர்ணயித்தல், காலத்திற்கு காலம் அவ்வாறு நிர்ணயித்த சம்பளத்தை திருத்தத்திற்கு உட்படுத்துதல், அதேபோல் ஆணையாளரிடம் கேட்டறிந்து அவ்வாறான விடயங்கள் பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளல்.

(4) ஆணைக்குழு மூலம் நிர்ணயிக்கப்படும் சம்பள முறைமைகளின்படி சம்பளம் வழங்கும்படி கூட்டுறவு சங்கங்களுக்கு உத்தரவிடுதல்.

(5) கூட்டுறவு சங்கங்களால் தனது ஊழியர்களுக்கு எதிராக மேற்கொள்ளும் ஒழுக்காற்று நடவடிக்கையின்போது பின்பற்றவேண்டிய காரிய கிரமங்களை நிர்ணயித்தல், அவைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரங்களை நிர்ணயித்தல் மற்றும் நிர்ணயித்த காலப்பகுதியில் ஒழுக்காற்று நடவடிக்கையை நடத்தி முடிக்குமாறு சங்கங்களுக்கு அறிவிப்புகளை விடுத்தல்.

(6) எந்தவொரு கூட்டுறவு சங்கத்தாலும் மேற்கொண்ட ஒழுக்காற்று நடவடிக்கையின் காரணமாக தோன்றும் மேன்முறையீடுகளை விசாரித்தல்.

(7) தனது ஊழியர்களைப்பற்றி எம்மாதிரியான அறிக்கைகளை கூட்டுறவு சங்கங்கள் தன்வசம் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதை நிர்ணயித்தல்.

(8) ஆணைக்குழுவிற்கு ஊழியர்களைப்பற்றி தேவைப்படும் கடித கோவைகள், வேறு ஆவனங்கள் மற்றும் விபர அறிக்கைகள் குறிப்பிட்ட தினத்துக்கு முன் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கும்படி மற்றும் வழங்கும்படி எந்தவொரு சங்கத்திற்கும் உத்தரவிடுதல்.

(9) ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படும் மேன்முறையீடு தொடர்பாக தேவையான விசாரணை பரிந்துரையுடன் ஆணைக்குழுவிற்கு அறிக்கை விடுவதற்கு மேன்முறையிடு விசாரணை அதிகாரியை அல்லது அதிகாரிகளுடனான சபையை நியமித்தல்.

(10) தனது செயற்பாடுகள் ஒழுக்காற்று விசாரணை விடயம் காரணமாக இடம்பெறும் ஒரு சங்கத்தில் எந்த ஒரு ஊழியர் மூலம் அந்த சங்கம் வழங்கிய ஒழுக்காற்று நடவடிக்கைக்கு எதிராக ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்துள்ள சந்தர்ப்பத்தில், அவ்வாறான மேன்முறையீட்டை கவனத்தில் கொண்டு சங்கத்தால் மேற்கொள்ளும் தீர்மானத்தை மாற்றுவதற்கு, இலகுவாக்குவதற்கு, இரத்துச் செய்வதற்கு அல்லது அதற்கு பதிலாக வேறொரு தீர்மானத்தை வழங்குவதற்கு அல்லது மீண்டும் விசாரணையை நடத்தும்படி உத்தரவிடுவதற்கு அல்லது அவ்வாறான ஒரு ஊழியரை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்வதற்கு உள்ளடங்களாக ஆணைக்குழுவால் வழங்கும் உத்தரவுகளை மற்றும் அவைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் விதத்தில் மற்றும் ஒரு தினத்தில் இல்லாவிடின் நிர்ணயிக்கப்படும் தினத்திற்கு முன் செயற்படுத்தும் படி கூட்டுறவு சங்கங்களுக்கு உத்தரவிடுதல்.

(11) ஒழுக்கம் தொடர்பாக அல்லது வேறோரு காரணத்தினால் ஊழியரை பணி நீக்கம் செய்யப்படவேண்டுமாயின் ஊக்குவிப்பு அல்லது வேறு உபகாரக் கொடுப்பனவுகளை ஊழியருக்கு வழங்குவது தொடர்பாக கொள்கையளவில் முடிவு செய்தல்.

(12) அமைச்சரால் அமைக்கப்பட்ட நிபந்தனைகள் மூலம் நிர்ணயிக்கப்படும் பணத்தை வைப்பில் இடும்படி மேன்முறையீடு செய்தவருக்கு உத்தரவிடுவதற்கும் மற்றும் மேன்முறையீடு விசாரணை இறுதியில் கூறப்பட்டுள்ள வைப்பு பணத்தை வசப்படுத்திக்கொள்வதற்கான அல்லது மீள செலுத்துவதற்கான தீர்மானத்தை எடுத்தல்.

(13) இந் நியதிச்சட்டம் செயற்படும் போது ஒரு கூட்டுறவு சங்கம் அல்லது ஒரு வகுப்பினாலான கூட்டுறவு சங்கங்களை விடுவிப்பது தொடர்பாக ஆணையாளர் விசாரித்து அமைச்சருக்கு ஆலோசணை வழங்குதல்.

(14) மாகாண சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட பின் அமைச்சரால் விதிக்கப்பட்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் கட்டளையின் மூலம், ஆணையாளர் சபைக்கு வழங்கக்கூடிய கூட்டுறவு சங்கங்களுக்கு மற்றும் அவைகளின் ஊழியர்களுக்கும் ஏற்ற வேறு அதிகாரங்களை நடைமுறைப்படுத்தல்.

(15) மேல் (6) மற்றும் (12)ம் உப பிரிவின் மூலம் ஆணைக்குழுவிற்கு வழங்கப்படும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் போது ஆணைக்குழு மூலம் எடுக்கும் ஏதேனும் தீர்மானங்களில் உள்ள உத்தரவை மாற்றுவதற்கும் அல்லது அகற்றுவதற்கும் ஆணைச்சபைக்கு இயலும்.

12. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் பணிகளுக்காக தேவைப்படும் நிதியை வருடாந்தம் அல்லது குறைநிரப்பு பாதீடு மூலம் மாகாணசபை ஒதுக்கித்தர வேண்டும். நிதி ஒதுக்கீடு.

13. (1) மேன்முறையீட்டாளர்களின் வைப்பு பணத்தில் நிதியமொன்றை ஏற்படுத்தலாம். கூறப்பட்ட நிதியத்திற்கு மேலே IIம் பந்தியில் (12)ம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வைப்புப்பணத்தை வைப்பிலிடலாம். இந்நிதியத்தின் முகாமைத்துவம் ஆணைக்குழுவிற்கு உரித்துடையதாகும். நிதியம் அமைத்தல்.

(2) இந் நிதியத்தை நிருவகிப்பதற்கு செயற்குழு நியதியை அமைத்து அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்.

## II ஆம் பகுதி

### கூட்டுறவு சங்கங்கள் மற்றும் அவைகளின் ஊழியர்கள்

14. ஒரு ஊழியருக்கு சம்பளம் அல்லது வேறு வேதனங்களை வழங்கும் ஒரு கூட்டுறவு சங்கம் அந்த ஊழியரின் சேவை வழங்குனராக கருதப்படவேண்டும். கூட்டுறவு சங்கம் சேவை வழங்குனராக இருத்தல்.

15. ஒவ்வொரு கூட்டுறவு சங்கமும் அதன் நிதியத்திலிருந்து அந்த சங்கத்தின் ஊழியர்களின் சம்பளம் மற்றும் வேறு கொடுப்பனவுகளை செலுத்த வேண்டும். கூட்டுறவு சங்க ஊழியர்களின் சம்பளம்.

16. ஒவ்வொரு கூட்டுறவு சங்கமும் அல்லது அந்த சங்கத்தின் எந்தவொரு ஊழியராக இருப்பினும், இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் ஆணைக்குழுவினால் விடுக்கப்படும் உத்தரவுகளுக்கு கீழ்ப்படிய வேண்டும், இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் ஆணைக்குழுவினால் அதிகாரத்தை நிறைவேற்றுவதில் அல்லது நடைமுறைப்படுத்துவதில் விடுக்கப்படும் ஆணைக்குழுவின் அனைத்து உத்தரவுகளும் மற்றும் 11 பிரிவின் (15)ம் உப பிரிவுகளின் நிபந்தனைகளின் அடிப்படையில் விடுக்கப்படும் உத்தரவுகளும் நிறைவுப்பெற்ற விடயமாக இருத்தல் வேண்டும், கூறப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் மற்றும் அதன் ஊழியர்கள் அந்த உத்தரவுகளை பின்பற்றுவதற்கு கடமைப்பட்டிருக்க வேண்டும். கூட்டுறவு சங்கங்கள் அவைகளின் ஊழியர்கள். ஆணைக்குழுவின் உத்தரவுகளுக்கு கீழ்ப்படிய வேண்டும்.

17. ஏதாவது ஒரு கூட்டுறவு சங்கத்தின் ஊழியர் தொடர்பாக ஆணைக்குழுவால் விடுக்கப்படும் அனைத்து உத்தரவுகளும் 11 பிரிவின் (15)ம் உப பிரிவின் நிபந்தனைகளின் அடிப்படையில் நிறைவுப்பெற வேண்டும், அவ்வுத்தரவு சங்கத்தால் விடுக்கப்பட்டது போல் அவ் ஊழியர் பின்பற்றுவதற்கு கடமைப்பட்டிருக்க வேண்டும். ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கு கூட்டுறவு ஊழியர்கள் கட்டுப்பட வேண்டும்.

18. இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நிறுவும் தினத்திற்கு அல்லது அதற்கு முன் 1972 இலக்கம் 12 யை கொண்ட கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு யாப்பு மற்றும் அதற்குள் உள்ளடக்கப்பட்ட திருத்தத்தின் படி மீளமைக்கும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு மூலம், 1989 இலக்கம் 12 யை கொண்ட மாகாண சபை (பலன் தரக்கூடிய நிபந்தனை) யாப்பின் படி ஊவா மாகாண கூட்டுறவு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் அவர்கள் நியமிக்கப்பட்ட மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால், ஊவா மாகாண ஆணையாளர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட 1991 இலக்கம் 5 யை கொண்ட ஊவா மாகாண கூட்டுறவு இந்த நியதிச்சட்டம் அமுலுக்கு வந்த திகதியிலிருந்து அதற்கு முன் செயற்பாடுகளும் செல்லுபடியாகுதல்.

சங்கம் மற்றும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச்சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களின் அடிப்படையில் நிறுவப்பட்ட ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால், ஊவா மாகாண கூட்டுறவு சங்கம் மற்றும் ஊழியர் விடயங்களும் செயற்படும் விதத்தில்,

(1) நிர்ணயிக்கப்பட்ட சம்பள முறைமை மற்றும் சேவை நிபந்தனைகளுடன் அனைத்து வகைப்படுத்தலும்,

(2) 1972 இலக்கம் 12 யை கொண்ட கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு யாப்பின் பணிகளை நிறைவேற்றுவதற்கு விடுக்கப்பட்ட அனைத்து விதமான நிபந்தனைகள்,

(3) பொறுப்பேற்கப்பட்ட சகல விதமான மேன்முறையீடுகளை விசாரிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட மற்றும் விசாரணையின் பின் உத்தரவிடுவதற்கான அனைத்து மேன்முறையீடுகள்,

(4) விதிக்கப்பட்ட அனைத்து நிபந்தனைகளும் மற்றும் வெளியிடப்பட்ட சுற்றுநிரூப நிபந்தனைகள் மற்றும்,

(5) நியமனம் செய்யப்பட்ட அனைத்து பதவி உயர்வும்,

இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் நடத்தப்பட்ட விதத்தில் சட்டபூர்வமான அதிகாரத்துடன் செல்லுபடியாகும் அதிகாரத்தை அமுல்படுத்தவேண்டும்.

*வதிவிடம் பற்றிய தகுதிகள்.*

19. கூட்டுறவு சங்கத்தில் எந்தவொரு பதவியில் சேர்த்துக்கொள்வதற்கும் அவர் ஊவா மாகாணத்தில் நிரந்தரமாக 2 வருடமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். அவ்வாறாயின் ஆணைக்குழுவின் கருத்தின்படி ஒரு கூட்டுறவு சங்கத்தில் அவ்வாறான பதவிக்கு தகுதியானவர் ஒருவரை ஊவா மாகாணத்தில் தெரிவுசெய்வதற்கு கடினமாக இருந்தால் அமைச்சரால் தயாரிக்கப்பட்ட நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் சங்கத்தின் மூலம் கூறப்பட்ட ஆணைக்குழுவிற்கு அறிவித்த பின் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் அம் மாகாணத்தில் நிரந்தரமாக வதியாத தகுதியுள்ளவர் ஒருவரை நியமிப்பதற்கு கூட்டுறவு சங்கத்திற்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

*கூட்டுறவு சங்கத்தின் தரத்திற்கமைய ஊழியர்களின் தரங்கள் மற்றும் வகுப்புகளிற் கமைய ஊழியர் சம்பள முறைமையை நிர்ணயித்தல்.*

20. கூட்டுறவு சங்கத்தில் ஒரு பதவியில் நியமிக்கப்படும் எவருக்கும் அந்த பதவிக்கான சம்பளமுறைமையை வழங்க வேண்டும். அது 25 (1) பிரிவில் குறிப்பிடப்பட்டிருப்பது போல் சங்கத்தின் தரத்தின்படி, நிர்ணயிக்கப்படும் ஊழியர் தரத்திற்கும் வகுப்பும் ஏற்றது போல் தீர்மானிக்கவேண்டும்.

*ஊவா மாகாண அரச சேவையிலிருந்து கீழ்நிலைக்கு நியமனம் செய்யலாம்.*

21. இந்த நியதிச்சட்டத்தில் வேறு நிபந்தனைகளில் என்ன குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதிகாரமுள்ளவரின் சம்மதமும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரியினதும் மற்றும் சங்கத்தினதும் விருப்பத்துடன் மாகாண அரச பணியில் உள்ள ஒருவரை சங்கத்தின் ஒரு பதவிக்கு ஆணைக்குழு குறிப்பிட்ட கால எல்லைக்கு, உத்தரவுகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் நியமிப்பதற்காக ஆணைக்குழுவிற்கு உரிமையுண்டு. இப் பிரிவின் படி நியமன அதிகாரி என குறிப்பிடப்படுவது ஊவா மாகாண அரச சேவையின் நியமனம் வழங்கும் அதிகாரியாவார்.

*கூட்டுறவு சங்கத்தின் ஊழியர்களை சேவையிலிருந்து நீக்குதல் மற்றும் தண்டனை வழங்குதல்.*

22. (1) கூட்டுறவு சங்கத்தின் ஊழியர்களை சேவையிலிருந்து நீக்குவதற்கு வேறு விதமாக தண்டனை வழங்குவதற்கு இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்டதாக கருதும் அல்லது நிபந்தனைகளின் படி செய்யப்பட வேண்டும்.

(2) இப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த நிபந்தனைகளிலும் இந்த ஆணைக்குழு நிறுவுவதற்கு முன் இடம்பெற்ற அல்லது தோன்றிய ஏதேனும் துர்நடத்தையால் அல்லது ஒழுக்கமீறல் அல்லது வேறு முறைப்பாடு காரணமாக அல்லது தொடர்பாக ஒரு கூட்டுறவு சங்க ஊழியருக்காக எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த நியதிச்சட்டத்தின்படி நடத்துவதற்கும் மற்றும் நிறைவு செய்வதற்கும் தடையாக இருக்கக்கூடாது.

(3) முறையான ஒழுக்கத்துடனான நடவடிக்கையை தவிர்த்து எந்தவொரு ஊழியருக்கும் தண்டனை வழங்குவதற்கு எதிராக அந்த ஊழியரால் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீட்டில் அல்லது அதற்கு தொடர்பான சட்ட நடவடிக்கையின்போது ஊழியருக்கு நட்டஈடு, சம்பள பாக்கி, அபராதம் அல்லது வேறொரு கொடுப்பனவை சங்கம் வழங்கவேண்டும் என நிலை தோன்றினால் அதற்கு காரணமாக செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் தனி தனியாக அல்லது ஒன்று சேர்ந்து அந்த தொகையை சங்கத்துக்கு செலுத்துவதற்கு பொறுப்புடன் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும். இந்த தொகையை ஊவா மாகாண கூட்டுறவு சங்க நியதிச்சட்டத்தின் படி வழங்கலாம்.

*ஊழியர்களுக்கான நிபந்தனைகள்.*

23. (1) கீழ் குறிப்பிட்டுள்ள விதத்தில் அதாவது

(அ) கூட்டுறவு சங்கங்களில் ஊழியர் தரப்படுத்தல் வகுப்பு மற்றும் தரத்தை நிர்ணயித்தல், பதவியில் இணைத்துக்கொள்ளல். நியமித்தல், பதவி உயர்த்துதல், இடம் மாற்றம் செய்தல், பதவி விலகல் மற்றும் பணி நிறைவு செய்வது தொடர்பாக,

(ஆ) ஊழியர்களின் பணி உத்தரவு மற்றும் நிபந்தனை உத்தரவுவிட்ட வண்ணம் அல்லது ஊழியர்களுக்கு சம்பள முறைமை, கொடுப்பனவு மற்றும் ஊக்குவிப்பு செலுத்துதல், முற்பணம் வழங்கள், விடுமுறை, ஒழுக்க நடவடிக்கை மற்றும் மேன்முறையீடு தொடர்பான அல்லது பணி நிர்ணயம் மற்றும் நிபந்தனைகளுக்கேற்ப மற்றும்,

(இ) தேவைப்படும் என கருதப்படும் வேறு விடயங்கள் தொடர்பாக,

அமைச்சர் நிபந்தனைகளை அமைக்கலாம்.

(2) ஊவா மாகாண சபையின் அதிகாரத்திற்குற்பட்ட எல்லைக்குள் அமைந்திருக்கும் அனைத்து கூட்டுறவு சங்கங்களும் அதன் ஊழியர்களும் இங்கு (1)ம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு விடயம் தொடர்பாக விதிக்கப்படும் அனைத்து நிபந்தனைகளுக்கும் உட்படவேண்டும்.

*தனது ஊழியர்கள் தொடர்பாக கூட்டுறவு சங்கத்தின் கடமைகள்.*

24. (1) அனைத்து கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் :

(அ) அங்கு ஒவ்வொரு ஊழியர் தொடர்பாகவும் ஆணைக்குழுவால் உத்தரவிடக்கூடிய ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் வைத்துக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு ஊழியர் தொடர்பாக ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்பட்ட விதத்தில் சம்பந்தப்பட்ட சகல விபரங்களையும் அவைகளில் உள்ளடக்கப்படவேண்டும்.

(ஆ) ஆணைக்குழு ஊழியர் தொடர்பாக வழங்கப்படவேண்டும் என நிர்ணயிக்கப்படக்கூடிய அறிக்கை மற்றும் தகவல் அத்துடன் அடிக்கடி ஆணைக்குழுவுக்கு தேவைப்படும் என உத்தரவிடக்கூடிய விதத்தில் தகவல்களை வழங்க வேண்டும்.

(இ) அந்த சங்க அலுவலகங்களில் ஒரு அலுவலகத்திற்கு உட்சென்று அங்கு வைக்கப்படும் புத்தகங்கள் கணக்கறிக்கை மற்றும் ஆவணங்களை பரீட்சித்து பார்ப்பதற்கு அவைகளின் பிரதிகளை பெற்றுக்கொள் வதற்கும், அதற்கான அதிகாரம் வழங்கப்பட்ட ஆணைக்குழுவின் உறுப்பினருக்கு அல்லது அதிகாரியொருவருக்கு ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளரின் முன்னங்கீகாரத்துடன் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் அதிகாரியொருவருக்கு ஊவா மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் முன் அங்கீகாரத்துடன் அவ்வாறு செய்வதற்கு இடமளிக்கவேண்டும்.

## III ஆம் பிரிவு

### ஆணையாளரின் அதிகாரம்

*ஆணையாளர் சங்கங்கத்தை தரப் படுத்தவேண்டும் மற்றும் ஊழியர் களை தீர்மானிக்க வேண்டும்.*

25. (1) கூட்டுறவு சங்கங்களில் ஊழியர் பதவிகளுக்கான சம்பள முறைமையை நிர்ணயிப்பதற்காகவும் கூட்டுறவு சங்கங்களை தரப்படுத்துவதற்காகவும் அந்த சங்கங்களின் ஊழியர்களின் தரத்தை மற்றும் வகுப்பை அத்துடன் ஒவ்வொரு தரத்திலான மற்றும் தரத்தில் இருக்கவேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கையை நிர்ணயிப்பது மற்றும் தேவைப்படும் என தான் கருதும் விதத்தில் அடிக்கடி மாற்றும் அதிகாரம் ஆணையாளருக்கு இருக்கவேண்டும்.

(2) மேலே (1) உப பிரிவின் படி ஆணையாளர் விதிக்கும் உத்தரவிற்கு முரணான விதத்தில் எந்த ஒரு கூட்டுறவு சங்கமும் எந்தவொரு நபரையும் சேவையில் இணைத்துக்கொள்ளக்கூடாது.

*தகுதி, சம்பள முறைமை போன்றவைகளுக்கு ஆணையாளரின் சம்மதத்தை பெறல்.*

26. ஆணைக்குழு கூட்டுறவு சங்கங்களின் பதவி நியமனங்களுக்கு தேவையான தகுதிகளை நிர்ணயிப்பதற்கு ஒரு தரத்தில் அல்லது ஒரு வகுப்பிற்கு ஒரு பதவிக்கு அல்லது பதவிகளுக்கான சம்பள முறைமையை நிர்ணயிப்பிற்கு அந்த சம்பள முறைமையை காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்படுவதற்கு ஆணையாளரின் சம்மதம் பெற்றுக் கொள்ளப்படவேண்டும்.

## IV ஆம் பிரிவு

### ஏனைய விடயங்கள்

*இடையூறுகளை அகற்றுதல்.*

27. (1) இந்த நியதிச்சட்டத்தின் நிபந்தனைகளை செயற்படுத்தும்போது அதனூடாக நிபந்தனைகளை அமைக்காத அல்லது காரியசித்தியுடனான நிபந்தனைகளை அமைக்காத அல்லது ஒரு காரணமாக அல்லது ஒரு பிரச்சினை தொடர்பான சந்தேகம் அல்லது சிரமங்கள் தோன்றினால் அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் அச்சிரமத்தை அல்லது சந்தேகத்தை அகற்றலாம். இல்லாவிட்டால் முடிவு செய்யலாம். அவ்வாறான கட்டளையொன்றை வர்த்தமானியில் வெளியிட்ட பின் அதற்கு சட்டபூர்வமான அதிகாரம் இருக்கவேண்டும். இந்த நியதிச்சட்டத்தில் விதிக்கப்பட்டது போல் செல்லுபடியானதாகவும் அதிகாரமுடையதாகவும் இருத்தல் வேண்டும்.

(2) மேலே (1)ஆம் உபபிரிவின்படி ஆணையாளரினால் உத்தரவிற்கு எதிராக எந்தவொரு கூட்டுறவு சங்கத்தினால் எவரையும் சேவைக்கு அமர்த்தக்கூடாது.

அமைச்சர் நிபந்தனைகளை விதிக்கலாம்.

28. (1) கூறப்பட்ட வேறு விதத்தில் நிபந்தனைகள் தயாரிக்கப்பட்டிருந்தாலே தவிர உத்தரவுகளை தயாரிப்பதற்கு இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது அல்லது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது அல்லது ஏதேனும் விடயங்களுக்காக அல்லது தொடர்பாக அதன் அனைத்து விடயங்களையும் மற்றும் உத்தரவிட வேண்டும் என இந்த நியதிச்சட்டத்தில் பிரசுரித்து அல்லது உத்தரவிடக்கூடிய அனைத்து விடயங்களுக்கான உத்தரவுகள் உள்ளடங்களாக இந்த நியதிச்சட்டத்தில் நிபந்தனைகளை செயற்படுத்துவதற்காக அல்லது அதன் கொள்கைகளை பலப்படுத்துவதற்கு தேவையான ஆணைக்குழுவிற்கு விதிக்கக்கூடிய சகல உத்தரவுகளையும் ஆணைக்குழு தயாரிக்கலாம்.

(2) அவ்வாறான ஒரு உத்தரவுக்கு அமைச்சர் அங்கிகாரம் கிடைக்கும் வரை மற்றும் அந்த அங்கிகாரம் பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படும் வரை அமுல்படுத்தக் கூடாது. அது வெளியிடப்பட்ட திகதியில் அல்லது உத்தரவில் நிர்ணயிக்கப்பட்ட வேறொரு தினத்தில் செயற்பட வேண்டும்.

(3) (1)ஆம் உப பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட சகல உத்தரவுகளும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின் கூடுமான விரைவில் அங்கீகாரத்துக்காக ஊவா மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அங்கீகரிக்காத ஒரு உத்தரவை, அந்த உத்தரவை பிறப்பித்த தினத்தில் இருந்து, ஆனால் அதனடிப்படையில் முன்னர் பிறப்பிக்கப் பட்டவைகளுக்கு எவ்வித தீங்கும் இல்லாதவாறு புறம்பாக செய்தது போல் கருதப்பட வேண்டும். ஏதேனும் ஒரு உத்தரவு புறம்பாக செய்ததாக கருதும் தினத்தை பற்றிய அறிவிப்பை வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும்.

சட்ட சம்பந்தமான பாதுகாப்பு.

29. எடுக்கப்பட்ட முடிவு அல்லது செய்யப்பட்ட அல்லது செய்யப்படாத ஏதேனும் ஒரு செயற்பாடு சம்பந்தமாக அல்லது ஆணைக்குழுவின் ஒரு உறுப்பினருக்கு ஆணைக்குழுவின் அங்கத்துவ நிலையில் அந்நபருக்கு அல்லது சட்டபூர்வமாக இணைக்கப்பட்ட நிலையில் ஆணைக்குழுவிற்கு எதிராக எந்தவொரு சிவில் அல்லது குற்றவியல் சட்ட நடவடிக்கையும் எடுப்பதற்கோ அல்லது நடத்துவதற்கோ கூடாது.

30. இந்த நியதிச்சட்டத்தின் நிபந்தனைகளில் என்ன குறிப்பிடப்பட்டிருந்தாலும் கூட்டுறவு சங்கம் அதன் செயற்திறன் நிமித்தம்,

(1) ஆணைக்குழுவின் முன் அங்கீகாரத்துடன் ஒப்பந்த அடிப்படையில் உறுதிசெய்யப்பட்ட பணி நிபந்தனைகளுக்கேற்ப நிபுணத்துவம் பெற்ற அல்லது திறமைசாலியை சேவையில் இணைத்துக்கொள்ளலாம். இல்லாவிடின்,

(2) தற்காலிக அல்லது நாட்சம்பளம் அல்லது மணிச்சம்பளம் அல்லது துண்டுகள் முறைமையில் ஊழியர்களை சேவையில் இணைத்துக்கொள்ளலாம். ஆனாலும் ஆணைக்குழுவின் சம்மதமில்லாமல் அவ்வாறான ஊழியர்களை சேவையில் நிரந்தமாக்கக்கூடாது.

குற்றங்கள்.

31. (1) (அ) இந்த நியதிச்சட்டத்தின் மீறுபவர்கள் அல்லது,

(ஆ) ஆணைக்குழுவின் மூலம் உத்தரவிடும் ஒரு செயலை தன்னிச்சையாக கவனத்தில் கொள்ளாத அல்லது நிராகரிக்கும் அல்லது கடமையை தவறவிடும் அல்லது இந்த நியதிச்சட்டத்தின் தேவைகளுக்கேற்ப ஆணைக்குழுவிற்கு அல்லது முறையாக அதிகாரம் வழங்கப்பட்ட அல்லது வழங்கும்படி உத்தரவிடும் ஒரு தகவலை தன்னிச்சையாக கவனத்தில் கொள்ளாத அல்லது நிராகரிக்கும் அல்லது கடமையை தவறவிடும் அல்லது,

(இ) பொய்யான அறிக்கையை சமர்ப்பிக்கும் அல்லது பொய்யான தகவலை சமர்ப்பிக்கும் அல்லது,

ஒரு கூட்டுறவு சங்கம் அல்லது செயற்குழு அல்லது ஒரு ஊழியர் இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் குற்றத்திற்கு குற்றவாளியாக வேண்டும்.

(2) மேலே (1)ம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றத்தை புரியும் சகல கூட்டுறவு சங்கங்களும் அல்லது நபர்களும் நீதிபதி முன்னிலையில் நடத்தப்படும் சுருக்கமாக விசாரணையின் பின் குற்றவாளியாக காணப்பட்டால் ரூபாய் 5000/- க்கு கூடாத அபராதத்திற்கு உட்படவேண்டும்.

(3) ஒரு கூட்டுறவு சங்கம் இந் நியதிச்சட்டத்தின் அடிப்படையில் ஒரு குற்றத்தை புரியும் போது அந்த கூட்டுறவு சங்கத்தில் சகல ஊழியர்களும் அந்த குற்றத்திற்கு குற்றவாளியாக வேண்டும். மேலும் அக் குற்றத்தை தவிர்ப்பதற்கான அனைத்து நடவடிக்கையும் தான் எடுத்ததாக அல்லது அக் குற்றம் தனக்கு தெரியாமல் நடத்தப்பட்டதாக அவர் ஒப்புக்கொண்டால் அவர் குற்றவாளியாக கருதப்படக்கூடாது.

(4) ஒரு ஊழியரை மீண்டும் சேவையில் அமர்த்தும்படி அல்லது அவ்வாறான ஒரு உத்தரவை ஆணைக்குழு வழங்கும் போது அவ்வாறான ஒரு உத்தரவை மீறி செயல்படும் காரணத்தைக்கொண்டு ஒரு கூட்டுறவு சங்கத்தை குற்றவாளியாக்கும் வேளையில் அவ்வாறான ஒரு கூட்டுறவு சங்கம் :

(அ) 31 (2)ம் உப பிரிவின் கீழ் விதிக்கப்படும் தண்டனைக்கு மேலதிகமாக குற்றம் செய்தபின் அக்கடமை மீறலை தொடர்ந்து செய்யும் ஒவ்வொரு நாளுக்கும் ரூபாய் 250/- வீதம் அபராதமாக செலுத்துவதற்கு உட்படுவதுடன்,

(ஆ) ஆணைக்குழுவின் உத்தரவுக்கேற்ப அந்த ஊழியரை சேவையில் அமர்த்தவேண்டிய நாளிலிருந்து நீதிமன்றத்தில் குற்றவாளிக்கப்பட்ட தினத்தில் நிறைவு பெரும் நாள் வரையிலான காலம் அந்த ஊழியர் சேவையை இடைநிறுத்தாது தொடர்ந்து சேவையில் இருந்ததாக கருதி அவருக்கு சேரவேண்டிய சம்பளம் மற்றும் வேறு கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு உற்படவேண்டும்.

(இ) ஒரு ஊழியருக்கான சம்பளத்தை அல்லது வேறு விதமான கொடுப்பனவை அல்லது நஷ்டஈட்டை செலுத்தும்படி ஆணைக்குழுவால் உத்தரவிடப்பட்ட சமயங்களில் அக்கொடுப்பனவை செலுத்துவதிலிருந்து விலகிக்கொள்ளும் சங்கத்தை குற்றவாளியாக்கப்பட்ட சமயத்தில் மேலே (2) ம் உப பிரிவின் கீழ் உத்தரவிடப்படும் தண்டனைக்கு மேலதிகமாக ஆணைக்குழு நிர்ணயிக்கும் பணத்தையும் செலுத்துவதற்கு உற்படவேண்டும்.

(ஈ) இந்த உப பிரிவில் (ஆ) மற்றும் (இ) பந்திகளின் அடிப்படையில் கூட்டுறவு சங்கம் செலுத்துவதற்கு உற்படும் பணம் அந்த சங்கத்தை குற்றவாளியாக்கிய நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட அபராதத்தை போல் அந்த நீதிமன்றத்தின் கட்டளைப்படி அறவிடப்படலாம்.

(5) இந்த பிரிவின் அடிப்படையில் சட்ட நடவடிக்கையின்போது ஆணைக்குழுவின் முடிவு இல்லாவிடின் உத்தரவின் உண்மைத்தன்மையை கருத்திற்கொண்டு பரீட்சிப்பதற்கு அல்லது முடிவு செய்வதற்கு நீதிபதிக்கு இந்த பிரிவின் மூலம் அதிகாரம் கிடைக்ககூடாது. அதே போல் உத்தரவிடக்கூடாது.

32. தனது கடமையை நிறைவேற்றப்படும் போது தவிர்ந்த நேராக அல்லது மறைமுகமாக அல்லது வேறு ஒருவர் மூலமாக அல்லது எவ்விதத்திலும் அல்லது ஆணைக்குழுவின் முடிவைப்பற்றி உறுப்பினருக்கு கட்டாயப்படுத்தப்படும் அல்லது கட்டாயப்படுத்துவதற்கு முயற்சி செய்யும் அல்லது சகலரும் குற்றம் புரிவதுடன் நீதிபதிக்கு எதிரில் நடைபெறும் சுருக்கமான விசாரணையின் பின் குற்றவாளியாக காணப்பட்டால் ரூபா 5000/- கூடாத அபராதம் அல்லது ஒரு வருடத்திற்கு கூடாத சிறைத்தண்டனைக்கு என்ற இரண்டு விதத்தில் ஒரு விதத்திலான தண்டனைக்கு அல்லது இரண்டு தண்டனைக்கும் உற்படுத்தப்படலாம். *ஆணைக்குழுவை கட்டாயப்படுத்துதல்.*

33. ஆணைக்குழுவின் உறுப்பினர் அங்கு செயலாளர் அங்கு ஊழியர்களுக்குள் ஒரு உறுப்பினர் அல்லது வேறு ஒரு நபர் தனது பதவிக்கான பணியை நிறைவேற்றும் சந்தர்ப்பத்தை தவிர தனது கடமைகளின் போது தான் அறிந்துகொண்ட ஆவனத்தில் அல்லது ஞாபகக்குறிப்பில் அல்லது உள்ளடக்கப்பட்டிருந்த ஏதாவது ஒரு தகவலை வெளியிடுவதற்கு அல்லது பிரசுரிப்பதற்கு முயற்சிக்ககூடாது. *அனுமதியின்றி தகவல்களை வெளியிடமுடியாது.*

34. ஆணைக்குழு அல்லது ஒரு உறுப்பினர் அல்லது ஒரு ஊழியர் மற்றும் ஒரு சங்கம் அல்லது அந்தச் சங்க செயற்குழுவின் ஒரு உறுப்பினர் அல்லது ஊழியர் அல்லது உறுப்பினர்களுக்கிடையில் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பாக பரிமாற்றம் செய்யப்பட்ட எழுத்து மூல அல்லது வாய்மூல ஞாபகக்குறிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயம் ஏதேனும் சட்ட நடவடிக்கையில் வெளியிடப்படுவதற்கு அல்லது சமர்ப்பிப்பதற்கு ஆணைக்குழுவின் தலைவர் அவர்களின் கடித மூல அங்கீகாரம் இருந்தாலொழிய எவருக்கும் அனுமதி இருக்ககூடாது. *ஆணைக்குழுவின் வாய்மூல குறிப்பு சலுகைகளுக்கு உட்பட்டது எண்பது.*

35. (1) தொழில் பிணக்கு சட்டத்தின் அடிப்படையில் நிறுவப்பட்டிருக்கும் தொழிலாளர் தீர்ப்பு அதிகார சபைக்கு சேவையாளர் ஒரு விடயம் தொடர்பாக அந்த யாப்பில் 3 (ஆ) அடிப்படையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தால் அந்த விடயம் தொடர்பாக அல்லது சாராம்சமாக அந்த விடயம் தொடர்பாக அல்லது அந்த சேவையாளர் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீட்டை ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளக்கூடாது. *கூட்டுறவு சங்கம் மற்றும் அதன் ஊழியர்கள் தொழில் பிணக்கு சட்டத்திற்கு ஏற்புடையவர்கள்.*

(2) இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் ஒரு சேவையாளர் ஆணைக்குழுவுக்கு ஒரு விடயம் தொடர்பாக வேண்டுகோள் சமர்ப்பித்திருப்பாரேயானால் அந்த விடயம் தொடர்பாக அந்த சேவையாளர் தொழில் பிணக்கு சட்டத்தின் அடிப்படையில் நிறுவப்பட்டிருக்கும் தொழிலாளர் தீர்ப்பு அதிகார சபைக்கு வேண்டுகோள் சமர்ப்பிப்பதற்கான அதிகாரம் இருக்கக்கூடாது.

36. ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் சகல உறுப்பினர்களும் ஆணைக்குழுவின் சகல அதிகாரிகளும் மற்றும் ஊழியர்களும் தண்டனை கோவை சட்ட நோக்கத்துக்குற்பட்ட மற்றும் அர்த்தத்துக்குள் அரச ஊழியர்களாக கருதப்படவேண்டும். *ஆணைக்குழு அதிகாரிகள் அரச ஊழியர்களாக கருதப்படவேண்டும் என்பது.*

இலஞ்ச ஊழல் அட்டவணைப்படுத்திய நிறுவனமாக கவனத்தில் கொள்ளுதல்.

37. இலஞ்ச ஊழல் சட்டத்தின் நோக்கம் மற்றும் அர்த்தத்துக்குள் ஆணைக்குழு, அந்த சட்டத்தின் அடிப்படையில் உப அட்டவணைப்படுத்திய நிறுவனமாக கவனத்தில் கொள்ளவேண்டும்.

நியதிச்சட்டத்தை இரத்துச்செய்தல்.

38. இந்த நியதிச்சட்டம் செயற்பட தொடங்கியதும் கீழ்காணும் நியதிச்சட்டம் செயற்படாது.

(அ) ஊவா மாகாண சபையில் 1991 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கம் கொண்ட கூட்டுறவு சங்கம் மற்றும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச்சட்டம்.

(ஆ) ஊவா மாகாண சபையில் 1992 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கம் கொண்ட கூட்டுறவு சங்கம் மற்றும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு திருத்த நியதிச்சட்டம்.

தெளிவின்மை தோன்றினால் சிங்கள மூல வாக்கியம் அமுல்படுத்தப்படல் வேண்டும்.

39. இந்த நியதிச்சட்டத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில பொருள்களுக்கிடையில் முரண்பாடு தோன்றினால் சிங்கள மொழியிலுள்ள மூல வாக்கியங்கள் அமுல்படுத்த வேண்டும்.

பொருள் கோடல்.

40. சொற்கள் தொடர்பாக வேறு அர்த்தங்கள் தேவைப்பட்டாலொழிய இந்த நியதிச்சட்டத்தில் -

"ஆளுனர்" என்பது ஊவா மாகாண ஆளுனர் எனவும்;

"அமைச்சர்" என்பது ஊவா மாகாண சபையில் கூட்டுறவு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் எனவும்;

"ஆணையாளர்" என்பது ஊவா மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவு சங்க பதிவாளர் எனவும்;

"கூட்டுறவு சங்கம்" என்பது கூட்டுறவு சங்கங்களுக்கான சட்டத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட சங்கம் எனவும்;

"செயற்குழு" என்பது பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பான முகாமைத்துவத்தை ஒப்படைக்கப்பட்ட சங்கத்தின் நிருவாக சபை என அர்த்தப்படும், பதிவு செய்யப்பட்ட சங்கங்கத்தில் பணிப்பாளர் சபையால் மற்றும் ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட நபர்கள் எனவும்;

"அதிகாரி" என்பது கூட்டுறவு சங்கம் தொடர்பாக குறிப்பிடப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்த சொல்லில் கூட்டுறவு சங்கமொன்றின் செயற்குழு உறுப்பினர்கள் செயலாளர் மற்றும் நிறைவேற்று அதிகாரிகள் எனவும்;

"ஊழியர்" என்பது கூட்டுறவு சங்கமொன்றில் நியமனம் பெற்று சம்பளம் அல்லது கொடுப்பனவு ஊதியம் பெறும் மற்றும் தீர்மானமான கடமைகளை வழங்கப்பட்ட ஊழியர் எனவும் அர்த்தப்படுத்தப்படுகிறது.

## அட்டவணை - இல. 01

ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் தலைவரால்/உறுப்பினரால் ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் நியதிச்சட்டத்தில் 10 (1)ம் பிரிவின் படி சத்தியபிரமாணம் செய்தல் உறுதிமொழி வழங்கல்.

ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் தலைவராக/உறுப்பினராக நியமனம் வழங்கப்பட்டுள்ள ............................................ ......................................................................................... ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்டுள்ள ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் தலைவர்/உறுப்பினர் பதவிக்கான கடமைகளை பக்தியுடனும், பக்கசார்பற்ற முறையிலும், மனித நேயத்துடனும், பகை உணர்வில்லாமலும், முழுமையாகவும், நேர்மையுடனும், நியாயமாகவும் நிறைவேற்றுவேன் என்றும், எனது கடமைகளை நிறைவேற்றும் போது மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு உரித்தான கடமைகள் தொடர்பான எந்தவொரு விடயம் தொடர்பாக நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு நபருக்கும் வெளியிடமாட்டேன் என நேர்மையுடனும் கம்பீரத்துடனும் கூறி சத்தியபிரமாணம் செய்கிறேன்/உறுதிமொழி வழங்குகிறேன்.

.....................................
கையொப்பம்

20....... ம் வருடம் ........... மாதம் ............ திகதி என் முன்னிலையில் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது/உறுதிமொழி வழங்கப்பட்டது.

................................................
மாகாண உயர்நீதிமன்ற நீதிபதி

**அட்டவணை - இல. 02**

*ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளரால்/உறுப்பினரால் ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைச்சபையின் நியதிச்சட்டத்தில் 10 (1)ம் பிரிவின் படி சத்தியபிரமாணம் செய்தல் உறுதிமொழி வழங்கல்.*

*ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளராக/ஊழியராக கூறப்பட்ட பதவியின் கடமைகளை செய்வதற்கு பணிக்கப்பட்டுள்ள .................................................................................................................... ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்டுள்ள ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர்/ஊழியர் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதை தவிர வேறு எந்த விதத்திலும் கூறப்பட்ட பதவியில் கடமை புரியும்போது நான் அறிந்துகொண்ட ஆவணங்களிலுள்ள, ஞாபகக்குறிப்புகளிலுள்ள தகவல்களை முழுமையாக அல்லது ஒரு பகுதியை நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு நபருக்கும் வெளியிடமாட்டேன் என நேர்மையுடனும் கம்பீரத்துடனும் கூறி சத்தியப்பிரமாணம் செய்கிறேன்/உறுதிமொழி வழங்குகிறேன்.*

.....................................
*கையொப்பம்*

*20....... ம் வருடம் ........... மாதம் ............ திகதி என் முன்னிலையில் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது/உறுதிமொழி வழங்கப்பட்டது.*

..................................................
*(தலைவர்)*
*ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,*
*பதுளை.*

*1 - 49/1*

---

## *ஊவா மாகாணத்தின் மாகாண சபை*

*ஊவா மாகாணத்தின் மாகாண சபையில் 2010 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க*
*ஊவா மாகாண வீட்டு வாடகை நியதிச் சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண சபையால் 2010 திசெம்பர் மாதம் 09 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2010 திசெம்பர் 24 ஆம் திகதி கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவரது கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.*

*கே. டி. சிறிசேன,*
*மாகாண சபை செயலாளர்,*
*ஊவா மாகாண மாகாண சபை.*

*ஊவா மாகாண மாகாண சபை செயலாளர் அலுவலகம்,*
*ராஜ வீதி,*
*பதுளை,*
*2011, ஜனவரி மாதம் 5 ஆந் திகதி.*

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபை

### 2010 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க
### ஊவா மாகாண வீட்டுக்கூலி நியதிச்சட்டம்

இது ஊவா மாகாணத்தில் கூலி வீடுகளில் வாழும் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கும், குடியிருப்பதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்துவதற்கும் அவர்களின் நல்வாழ்வுக்கான வசதிகளை உருவாக்கும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குமான 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வீட்டுக்கூலி சட்டத்தை ஊவா மாகாணத்தில் செயற்படுத்துவதற்கு தேவையான சட்ட நிபந்தனைகளை அமைப்பதற்கும் மற்றும் சட்டபூர்வமான அதிகாரங்களுடனான நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளை நிறுவி நடத்துவதற்குமானதாகவும் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்களை நிறைவேற்றுவதற்குமான நிபந்தனைகளை அமைப்பதற்குமாக உருவாக்கப்பட்ட நியதிச்சட்டமாகும்.

இந் நியதிச்சட்டம் 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வீட்டுக்கூலி சட்டத்திற்கு மற்றும் அதன் பின் மேற்கொள்ளப்பட்ட திருத்தச்சட்டத்திற்கு ஏற்புடையதாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு 13ம் திருத்தச்சட்டத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் படி ஊவா மாகாணத்தின் மாகாண சபை இவ்வாறு பிரகடனப்படுத்துகிறது.

சுருக்கப் பெயரும் செயற்படும் திகதியும்.

1. இந்நியதிச்சட்டம் 2010 இலக்கம்5 கொண்ட ஊவா மாகாண வீட்டுக்கூலி நியதிச்சட்டம் என அழைக்கப்படுவதுடன் இது ஊவா மாகாண ஆணையாளர் அவர்களால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட நாளிலிருந்து அல்லது பின்னர் நிர்ணயிக்கப்பட்ட நாளிலிருந்து செயற்படும்.

உரிய யாப்பு.

2. இங்கு இதன் பின் "குறிப்பிட்ட யாப்பு" என குறிப்பிடப்படும் 1972 இலக்கம் 7 யை கொண்ட வீட்டுக்கூலி யாப்பு மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட திருத்தச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளை மற்றும் பணிகளை ஊவா மாகாணத்தில் நிறைவேற்றுவதற்கும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களை செயற்படுத்துவதற்கும் இங்கு இதன் பின் குறிப்பிடப்பட்டுள்ளது போல் பொறுப்புகளை வழங்குவதும் சட்டபூர்வமானதாகும்.

ஊவா மாகாணம்.

3. இங்கு இதனை மாகாணம் என அழைக்கப்படும் பதுளை மற்றும் மொனறாகலை என்ற இரு நிர்வாக மாவட்டங்களினால் உருவாக்கப்பட்ட பகுதி ஊவா மாகாணம் என அழைக்கப்படும்.

மாகாண சபை.

4. (1) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு 13ம் திருத்தச்சட்டத்தின் பிரகாரம் மற்றும் 1987 இலக்கம் 42 யை கொண்ட மாகாண சபை சட்டத்தின் படி ஊவா மாகாணத்தில் அமைக்கப்பட்டு, தற்சமயம் நடைமுறையில் இருக்கும் சட்டதிட்டங்களுக்குற்பட்ட அரசியல் அதிகாரம் கொண்ட சபையை ஊவா மாகாணத்தின் மாகாண சபை என அழைக்கப்படுவதுடன் குறிப்பிட்ட யாப்புகளில் பாராளுமன்றம் என குறிப்பிட்டு அதற்கு வழங்கப்பட்டுள்ள சகல பொறுப்புளையும் அந்த யாப்புகள் ஊடாக இந்த மாகாணத்தில் செயற்படுத்தும்போது, மாகாண சபை மூலம் நிறைவேற்றப்படவேண்டும்.

(2) குறிப்பிட்ட யாப்புகளில் நியமன உறுப்பினர் சபையென குறிப்பிட்டு அதற்கு வழங்கப்பட்டுள்ள சகல பொறுப்புகளையும் அந்த யாப்புகள் ஊடாக இந்த மாகாணத்தில் செயற்படுத்தும்போது ஊவா மாகாணத்தின் மாகாண சபை உறுப்பினர்களால் நிறைவேற்றப்படவேண்டும்.

மாகாண அமைச்சர்.

5.(1) ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் வீடு விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர், இங்கு மாகாண அமைச்சராக அழைக்கப்படுவதுடன் குறிப்பிட்ட யாப்புகளில் "அமைச்சர்" என குறிப்பிட்டு அவருக்கு வழங்கப்பட்டுள்ள சகல கடமைகளையும் மற்றும் பணிகளையும் மாகாணத்தில் நிறைவேற்றுவதற்கும், அதிகாரங்களை செயற்படுத்துவதும் மாகாண அமைச்சர் செயற்படுவாரேயானால் அது சட்டபூர்வமானதாகும்.

(2) குறிப்பிட்ட யாப்புகளில் அமைச்சரால் அமைக்கப்பட்டுள்ள தற்சமயம் நடைமுறையில் இருக்கும் உத்தரவுகள் மாகாண அமைச்சரால் விதிக்கப்பட்ட உத்தரவுகளாக கவனத்தில் கொள்ளப்படுவதுடன், குறிப்பிட்ட யாப்புகள் ஊவா மாகாயணத்தில் செயற்படுத்தும் போது அந்த யாப்புகளின் அடிப்படையில் அமைச்சரால் விதிக்கப்பட்ட உத்தரவுகளின் படி செயற்படுவது சட்டபூர்வமானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் தற்சமயம் அமுலில் இருக்கும் உத்தரவுகளை இரத்துச் செய்வதற்கு, மாற்றுவதற்கு, திருத்தம் செய்வதற்கு அல்லது புதிய உத்தரவுகளை மாகாண அமைச்சர் அமைக்ககூடியதாக இருத்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட யாப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளும் மற்றும் பணிகளும் ஊவா மாகாணத்தில் செயற்படுத்துவதற்காக மாகாண வீட்டு திணைக்களமொன்றை நிறுவப்படவேண்டும். அந்த திணைக்களம் ஊவா மாகாண வீட்டு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின்கீழ் செயற்படும் புறம்பான அலகாக அல்லது பிரிவாக இருத்தல் வேண்டும். — மாகாண வீடமைப்பு திணைக்களம் ஒன்றை நிறுவுதல்.

7. குறிப்பிட்ட யாப்புகள் ஊவா மாகாணத்தில் செயற்படுத்தும் போது கூறப்பட்ட யாப்புகளில் "தேசிய வீட்டு திணைக்களம்" என குறிப்பிட்டு அதற்கு வழங்கப்பட்டுள்ள சகல கடமைகளையும் மற்றும் பணிகளையும் 13ம் அரசியலமைப்பு திருத்தச்சட்டத்தின் படி மாகாணத்தில் நிறைவேற்றப்படுவதும் பொறுப்பேற்பதும் மேலே 6ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மாகாண வீட்டு திணைக்களம் மூலம் நடாத்தப்படுவதும் சட்டபூர்வமானதாகும்.

8.(1) மேலே 6ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மாகாண வீட்டு திணைக்களத்தின் தலைமை பதவிக்கு மாகாண வீட்டு ஆணையாளர் ஒருவரை ஊவா மாகாண ஆளுனர் அவர்கள் நியமிக்கவேண்டும். அவர் இலங்கை நிர்வாக சேவையில் முதற்தர அதிகாரியாக இருத்தல் வேண்டும். — மாகாண வீடமைப்பு ஆணையாளர்.

(2) குறிப்பிட்ட யாப்புகள் ஊவா மாகாணத்தில் செயற்படுத்தும் போது அந்த யாப்புகளில் "தேசிய வீட்டு ஆணையாளர்" அல்லது "ஆணையாளர்" மட்டும் ஆக குறிப்பிட்டு அவருக்கு வழங்கப்பட்டுள்ள சகல கடமைகளையும், பணிகளையும் 13ம் அரசியலமைப்பு திருத்தச்சட்டத்தின் படி ஊவா மாகாணத்தில் நிறைவேற்றுவதற்கும், கூறப்பட்ட யாப்புகளின் மூலம் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை ஊவா மாகாணத்திற்குள் செயற்படுத்தும் பணியை, மாகாண வீட்டு ஆனையாளர் நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுவது சட்டபூர்வமானதாகும்.

9. குறிப்பிட்ட யாப்புகள் ஊவா மாகாணத்தில் செயற்படுத்தும் போது அந்த யாப்புகளில் -தேசிய வீட்டு நிதியம்- அல்லது "சீர்திருத்த நிதியம்" ஆக குறிப்பிட்டு அந்த நிதியத்திற்கு வழங்கப்பட்டுள்ள சகல பணிகளையும் மாகாணத்தில் நிறைவேற்றுவதற்காக "மாகாண வீட்டு வங்கிக் கணக்கு" என அழைக்கப்படும் நிதியத்தை ஏற்படுத்தி குறிப்பிட்ட யாப்புகள் மூலம் தேசிய வீட்டு நிதியத்தின் மூலம் நிறைவேற்றப்படவேண்டிய சகல கடமைகளையும் ஊவா மாகாணத்திற்குள் வீட்டுக்கணக்கு மூலம் நிறைவேற்றப்படுவது சட்டபூர்வமானதாகும். — மாகாண வீடமைப்பு வங்கிக் கணக்கு.

10.(1) குறிப்பிட்ட யாப்புகளில் "பிரதேச அதிகாரசபை" என அழைக்கப்படும் சகல இடங்களிலும் தற்சமயம் செயற்படும் பிரதேச சபைகளும் உள்ளடக்கப்படவேண்டும் அந்த யாப்புகளில் நகர சபை மற்றும் கிராம சபை என குறிப்பிடப்பட்டுள்ள சகல இடங்களிலும் "பிரதேச சபை" க்கு பதிலாக குறிப்பிட்ட யாப்புகள், ஊவா மாகாணத்தில் செயற்படுத்துவது சட்டபூர்வமானதாகும். — பிரதேச சபைகளை கூட்டிணைத்தல்.

(2) குறிப்பிட்ட யாப்புகள் ஊவா மாகாணத்தில் செயற்படுத்தும் போது அந்த யாப்புகளில் நகர சபை மற்றும் கிராம சபை என குறிப்பிடப்பட்டு அந்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சகல அதிகாரங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரதேச சபை மூலம் செயற்படுத்துவதும், பொறுப்பேற்றுக்கொள்வதும் சட்டபூர்வமானதாகும்.

11.இந்த நியதிச்சட்டத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில பொருட்பதங்களுக்கு இடையில் முரண்பாடு தோன்றினால் சிங்கள மொழியிலுள்ள மூல வாக்கியங்கள் அமுல்படுத்தப்படல் வேண்டும். — முரண்பாடு தோன்றினால் சிங்கள மொழியிலுள்ள மூல வாக்கியங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும்.

249/2

## ஊவா மாகாணத்தின் மாகாண சபை

ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க ஊவா மாகாண சமூக சேவைகள் நியதிச் சட்டம்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண சபையால் 2010 டிசம்பர் மாதம் 09 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2010 டிசம்பர் 24 ஆம் திகதி கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவரது கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.

கே. டி. சிறிசேன,
மாகாண சபை செயலாளர்,
ஊவா மாகாண மாகாண சபை.

ஊவா மாகாண மாகாண சபை செயலாளர் அலுவலம்,
ராஜ வீதி,
பதுளை,
2011 சனவரி 5.

### 2010 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஊவா மாகாண வீடமைப்பு நியதிச்சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச்சட்டத்தின் பதின்மூன்றாம் திருத்தத்தின் படி மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கும் நிபந்தனைகளுக்கினங்க ஊவா மாகாணத்தில் வீடமைப்பு பணியை மேம்படுத்துமுகமாக இதன் மூலம் நன்மை பெறுபவர்களை தெரிவு செய்தல், அவர்களுக்கு பொருளுதவி, கடன் அல்லது நிதியுதவி வழங்குதல், காணி அல்லது கட்டப்பட்ட வீடுகளை வழங்குவது உள்ளடங்களாக வீட்டு வசதியை மேம்படுத்தக்கூடிய திட்டங்களை அமைத்தல், செயற்படுத்தல், தொடர்புகளை ஏற்படுத்துதல், கண்காணித்தல், முன்னேற்றத்தை நிர்வகிப்பதுடன் அவ்வாறான திட்டங்களை செயற்படுத்துவதற்கு தேவையான நிதி வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியை முகாமைத்துவம் செய்வதற்கும், வீடு அபிவிருத்தியை இலக்காகக்கொண்டுள்ள மக்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கும் தேவையான சமூக அமைப்புகளை நிறுவுதல் மற்றும் அந்த அமைப்புகளுக்கு அதிகாரம் வீடு அபிவிருத்தி திட்டங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவதற்கான நிபந்தனைகளை அமைப்பதற்குமாக உருவாக்கிய நியதிச்சட்டமாகும் இது. இந்த நியதிச்சட்டம் 1979 இலக்கம் 17 யை கொண்ட தேசிய வீடு அபிவிருத்தி அதிகார சபையின் சட்டத்திற்கு இசைவுற்றதாகும்.

முகவுரை.

ஊவா மாகாணத்தில் வாழும் அனைவருக்கும் வாழ்வதற்கு பொருத்தமான வீட்டை வழங்குவதும் மற்றும் பெற்றுக்கொள்வதற்கும், கட்டிக்கொள்வதற்கும் தேவையான உதவி வழங்குவதன் மூலம் அவர்களின் வீட்டுத்தேவையை நிறைவேற்றுவதே ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் கொள்கையென்பதால்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபை இவ்வாறு பிரகடனப்படுத்துகிறது.

சுருக்கப் பெயரும் செயற்படும் திகதியும்.

1. இந் நியதிச்சட்டம் 2010 இலக்கம் 6 கொண்ட ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் வீடு அபிவிருத்தி நியதிச்சட்டம் என அழைக்கப்படுவதுடன் ஊவா மாகாண ஆளுனர் (இதன் பின் "ஆளுனர்" என அழைக்கப்படும்) அவர்களின் அங்கீகாரம் வழங்கும் இந் நியதிச்சட்டம் தினத்திலிருந்து செயற்படும்.

## I ஆம் பகுதி

### பொது

2. ஊவா மாகாணத்தில் வாழும் மக்கள் வாழ்வதற்கு பொருத்தமான வீட்டை பெற்றுக்கொள்வதற்கும் அல்லது கட்டிக்கொள்வதற்கும் தேவையான உதவி வழங்குவதற்கான நிபந்தனைகளை அமைப்பதே இந் நியதிச்சட்டத்தின் நோக்கமாக இருத்தல் வேண்டும். இலக்கு.

3. மேலே 2ம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கை அடைவதற்கும், இந் நியதிச்சட்டத்தின் பணியையும் கடமையும் நிறைவேற்றுவதற்கும் ஊவா மாகாணத்திற்காக வீடு அபிவிருத்தி திணைக்களமொன்று (இதன் பின் "திணைக்களம்" என அழைக்கப்படும்) தொடந்திருக்க வேண்டும். அது தனியான திணைக்களமாக அல்லது ஒரு அலகாக ஒழுங்கமைக்கப்படல் வேண்டும். வீடமைப்பு அபிவிருத்தி திணைக்களம்.

4. மேலே 3ம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தினைக்களத்தின் தலைமை பதவிக்கு மாகாண வீடு ஆனையாளர் ஒருவரை (இதன் பின் "ஆணையாளர்" என அழைக்கப்படும்) ஆளுனர் நியமிக்கவேண்டும். அவர் இலங்கை நிர்வாக சேவையில் முதலாம் தர அதிகாரியாக இருத்தல் வேண்டும். மாகாண வீடமைப்பு ஆணையாளர்.

5. மாகாண வீடு ஆணையாளருக்கு உதவுவதற்காக உதவி ஆணையாளர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகளையும் நியமிக்கலாம். ஏனைய அலுவலர்களை நியமித்தல்.

6. மாகாண வீடு ஆணையாளர் ஊவா மாகாண வீட்டு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சின் அமைச்சரின் (இதன் பின் "அமைச்சர்" என அழைக்கப்படும்) பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கு மற்றும் ஊவா மாகாண வீட்டு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர் (இதன் பின் "செயலாளர்"என அழைக்கப்படும்) நாயகத்தின் உத்தரவுகளுக்கும் கண்காணிப்புக்கும் கீழ் செயற்படவேண்டும்.

## II ஆம் பகுதி

### அதிகாரமும் பணிகளும்

7. அமைச்சர் மற்றும் செயலாளரின் உத்தரவுகளுக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவது ஆணையாளரின் பொறுப்பாகும். வீடமைப்பு ஆணையாளரின் பணிகளும் கடமைகளும்.

(1) குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும் மற்றும் பொது மக்களின் உதவி பெற்று வாழ்பவர்களுக்கும் உதவியாக பொருட்கள் மற்றும் நிதியுதவி வழங்குவதற்கான செயற்திட்டத்தை ஒழுங்கமைத்தல்.

(2) குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வீடு அபிவிருத்திக்காக கடனுதவி வழங்கல்.

(3) உதவி பெற்றுத்தரும் கைத்தொழில் வீட்டு செயற்திட்டத்தை ஒழுங்கமைத்தல்.

(4) வீட்டு அபிவிருத்திக்காகவே கட்டிட பொருட்களை உற்பத்திசெய்தல்.

(5) வீட்டு அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல்.

(6) மக்கள் வசப்படுத்தப்பட்ட வீட்டு செயற்திட்டங்களுக்கு மேலும் தேவையான வசதிகளை ஏற்படுத்தல்.

(7) வீட்டு செயற்திட்டங்களுக்கு பொருத்தமான காணிகளை இனங்காணல், அக்காணிகளை அபிவிருத்தி செய்தல், அந்த காணிகளில் வீடுகளை அமைத்தல்.

(8) வீடுகள் மற்றும் காணிகள் வழங்கப்படவேண்டியவர்களை இனங்காணல், தெரிவுசெய்தல், அவர்களுக்கான வீடுகளையும் காணியையும் கையளித்ததிற்கு செயற்பாடுகள் செய்தல்.

(9) வீடுகளை கட்டிக்கொள்வதற்கு பொருத்தமான காணிகள் இல்லாதோருக்கு அதற்கேற்ப காணிகளை வழங்குதல்.

(10) பொருளுதவி, நிதியுதவி, கடனுதவி வழங்குவதற்கு பொருத்தமான வழிமுறைகளை அமைச்சரின் சம்மதத்துடன் அமைத்தல்.

(11) கடனுதவி மற்றும் சொத்துகளின் பெறுமதியை மீள் அறவிடுவதற்கு பொருத்தமான வழிமுறைகளை அமைச்சரின் சம்மதத்துடன் அமைத்தல்.

(12) வீட்டு அபிவிருத்தி நோக்கத்துக்காக பலவித மூலங்களினால் கிடைக்கும் நிதியை அமைச்சரினதும் செயலாளரினதும் சம்மதத்துடன் பொருத்தமான செயற்திட்டங்களுக்கு பயன்படுத்துதல்.

(13) வீட்டு அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கான திட்டங்களை அமைத்தல், செயற்படுத்துதல், நிர்வகித்தல், முகாமைத்துவம் செய்தல், கண்காணித்தல் மற்றும் பின் மதிப்பீட்டை மேற்கொள்ளல்.

(14) வீட்டு அபிவிருத்தி பணிகளுக்காக சமூக அமைப்புகளை நிறுவுதற்கு பொருத்தமான விடயங்களை மேற்கொள்ளல் அவ்வாறான அமைப்புகளை பதிவு செய்தல்.

(15) வீட்டு அபிவிருத்தி பணிகளுடன் தொடர்புடைய வேறு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் வீட்டு அபிவிருத்தி நோக்கத்துடனான செயலாளருக்காக பணிகளுக்கு எழுத்து மூல ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு உத்தியோகபூர்வ ஆவனங்களில் கையொப்பமிடல் அத்துடன் அவ்வாறான நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து செயற்படல்.

(16) இந்த நியதிச்சட்டத்தின் பணிகளுக்கு நாடளாவிய ரீதியில் நிதி வழங்கும் வழிகளில் பணத்தை கடனாக பெற்றுக்கொள்வதற்கும், வீடு வழங்கப்படவேண்டியவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்தல்.

(17) இந்த நியதிச்சட்டத்தின் பிரகாரம் வழங்கப்படும் கட்டிடங்களுக்கான கூலி, குத்தகை அல்லது கட்டணம் அறவிடுதல் மற்றும் வசூல் செய்தல்.

அமைச்சரின் அதிகாரங்கள்.

8. இந்த நியதிச்சட்டத்தின் இலக்கை அடைவதற்காக அமைச்சருக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள் இருத்தல் வேண்டும்.

(1) வீட்டு அபிவிருத்தி நோக்கத்துடன் அசையும் மற்றும் அசையாத சொத்துகள் கொடையாக அல்லது வேறு விதத்தில் பெற்றுக்கொள்ளல், பாதுகாத்தல், நிர்வகித்தல், விற்பனை செய்தல், குத்தகைக்கு கொடுத்தல், ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ளல் அல்லது வீட்டு அபிவிருத்தி நோக்கத்துக்காக வேறு விதத்தில் அகற்றுவதற்காக அங்கீகாரம் வழங்கல்.

(2) வீட்டுக்கான பொருளுதவி, நிதியுதவி, கடனுதவி காணி அல்லது வீடு வழங்கும் போது குறைந்த வருமானம் பெறுபவர்களின் அல்லது பயன்பெறுபவர்களின் வருமான எல்லை உள்ளிட்ட தகுதிகளை தீர்மானித்தல் மற்றும் பயன்பெறுபவர்கள் தேர்ந்தெடுக்கும் கருமங்களுக்கு அல்லது வீட்டு அபிவிருத்தி நடவடிக்கைகளின் மேற்பார்வைக்காக குழுவினை நியமித்தல்.

(3) வீட்டு அபிவிருத்தி நோக்கத்துக்காக ஒதுக்கப்பட்ட காணியை அந்த விடயத்திற்காகவே பயன்படுத்துவதை அங்கீகரித்தல்.

(4) கடனுதவி, நிதியுதவி, காணி, வீட்டு அல்லது பொருளுதவி வழங்கும்போது, பணம், வட்டி, தவனை, அளவு, காலம் போன்றவற்றின் வரையறையை தீர்மானித்தல்.

(5) மீண்டும் அறவிட்டுக்கொள்ளும் கடன் தொகை மூலம் கடன்களை வழங்குவதற்கு தேவையான தீர்மானங்களை மேற்கொள்ளல்.

(6) இந்த நியதிச்சட்டத்தின் பணிகளுக்கு பொருத்தமான உத்தரவுகளை பிறப்பித்தல்.

நிதி ஏற்பாடுகள்.

9. (1) இந்த நியதிச்சட்டத்தின் பணிகளுக்கு மாகாண சபையின் வருடாந்த வரவுசெலவில் நிதி ஒதுக்கப்படவேண்டும்.

(2) வீட்டு அபிவிருத்தி பணிகள் நிமித்தம் வீட்டு அபிவிருத்தி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சின் மூலம் அல்லது திணைக்களத்தின் மூலம் அல்லது அமைப்புகள் மூலம் கிடைத்த வருமானம் மாகாண சபை வங்கி கணக்குகள் ஊடாக மாகாண அமைச்சுக்கு வழங்கப்படவேண்டும்.

(3) வீட்டு அபிவிருத்தி நிமித்தம் ஏற்பாடு செய்யப்படும் லொத்தர் வருமானத்தை அமைச்சு பெற்றுக்கொள்ளலாம்.

(4) வீட்டு அபிவிருத்திக்காக பலவித மூலங்கள் மூலமாக கிடைக்கும் கொடைகளை அமைச்சு பொறுப்பேற்கலாம்.

(5) அரச சார்பற்ற அமைப்புகளினால் வழங்கப்படும் கொடைகளை அமைச்சு பொறுப்பேற்கலாம்.

(6) இந்த நியதிச்சட்டத்தின் பிரகாரம் அமைச்சு அல்லது திணைக்களம் மூலம் முகாமைத்துவம் செய்யப்பட்ட சொத்துகளிலிருந்து பெறப்படும் கூலி, குத்தகை பணம் வேறு விதத்தில் கிடைக்கும் பலவித வருமானத்தை அமைச்சு பொறுப்பேற்கலாம்.

(7) கடன் தவணையை அறவிடுவதன் மூலம் சொத்துகளை வழங்குவதன் மூலம், மற்றும் தவணை முறையில் அல்லது ஒரேயடியாக கிடைக்கும் வருமானத்தை அமைச்சு பொறுப்பேற்கலாம்.

10. (1) மேலே 9ம் பிரிவின் பிரகாரம் கிடைக்கும் பலவித வருமானத்தை வீட்டு அபிவிருத்தி கணக்கில் (இதன் பின் "கணக்கு" என அழைக்கப்படும்) சேகரிக்கக்கூடியதாக இருக்கவேண்டும். வீடமைப்பு அபிவிருத்திக் கணக்கு.

(2) கணக்கின் நிதியாண்டு கலண்டர் ஆண்டாகும்.

(3) இந்த கணக்கு 1987 மாகாண சபை சட்டத்தின் இலக்கம் 42 ஆம் அட்டவணைப்படி கணக்காய்வுக்கு உட்பட்டது. ஊவா மாகாண உள்ளக கணக்காய்வு பணிப்பாளரின் கணக்காய்வுக்கும் அமைச்சின் உள்ளக கணக்காய்வுக்கும் உட்டவேண்டும்.

(4) இக் கணக்கு செயலாளரின் நேரிடையான கண்காணிப்பில் இருத்தல் வேண்டும்.

11. (1) வீட்டு அபிவிருத்தி நோக்கத்தைக்கொண்ட நிகழ்ச்சிகளுக்கு உதவிகளை பெற்றுக்கொள்வதற்காக சமூகத்திற்குள் உருவாக்கப்படும், வீட்டு அபிவிருத்தி சங்கங்கள் சட்டபூர்வமானதாக இருத்தல் வேண்டும். வீடமைப்பு அபிவிருத்தி சங்கம்.

(2) மேலே (1) ம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கங்களை அமைத்தல் மற்றும் நிர்வகிப்பதற்காக பொருத்தமான யாப்பை உருவாக்கி அமைச்சரின் உத்தரவுடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு செயற்படுத்தலாம்.

(3) மேலே (2) ம் உப பிரிவின் படி சட்ட திட்டங்களுக்கமைய அமைக்கப்பட்ட சங்கங்கள் ஆணையாளரால் பதிவு செய்யப்பட்ட பின் அதை உறுதி செய்வதற்கு சான்றிதழ் வழங்கலாம்.

(4) பதிவுசெய்யப்பட்ட வீட்டு அபிவிருத்தி சங்கத்திற்கு, கேள்வி அறிவித்தல் செயல்முறையை தவிர்த்து, வீட்டு அபிவிருத்தி நோக்கத்தைக்கொண்டுள்ள அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு ஒப்பந்தத்தை வழங்கக்கூடியதாக இருக்கவேண்டும். ஒப்பந்தம் மூலம் வழங்கக்கூடிய ஆகக்கூடிய பெறுமதியை, காலத்திற்கு காலம் திறைசேரியின் அல்லது நிதி அமைச்சின் செயலாளரால் நிர்ணயிக்கப்படும், சங்கங்கள் நிர்ணயிக்கப்படும் வரையறைக்கு உட்பட்டதாக வேண்டும்.

(5) வீட்டு அபிவிருத்தி நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக ஆணையாளர் அல்லது செயலாளர் வீட்டு அபிவிருத்தி சங்கங்களின் உதவியை பெற்றுக்கொள்ளலாம்.

12. (1) இந்த நியதிச்சட்டத்தின் கீழ் ஒரு காணியை, பொருளுதவியை, நிதியுதவி, கடனுதவி, அல்லது வேறு உதவியை பெற்றுக்கொண்ட பயன் பெறுபவர்கள் ஆணையாளருடன் தனது வீட்டு அபிவிருத்தி நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக பொருத்தமான நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்ட ஒப்பந்தத்தில் (இதன் பின்"ஒப்பந்தம" என அழைக்கப்படும்) உள்ளடக்கப்படவேண்டும். பயன் பெறுபவர்களின் பொறுப்பு.

(2) மேலே (1) ம் உப பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் படி செயற்படாத பயன் பெறுபவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணி, வீடு, பொருளுதவி, நிதியுதவி,கடனுதவி, அல்லது மற்றைய உதவிகளை மீளப்பெற்றுக்கொள்வதற்கு ஆணையாளர் நீதிபதி நீதிமன்றத்துக்கு வேண்டுகோள் விடுக்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

(3) மேலே (2) ம் உப பிரிவின் பிரகாரம் நீதிபதி நீதிமன்றத்திற்கு வேண்டுகோள்விடுப்பதற்கு முன் ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் மீறப்பட்டுள்ளதாக பயன்பெறுபவருக்கு பதிவு தபால் மூலம் தெரிவிப்பதற்கும், நிபந்தனைகளை நடைமுறைபடுத்துவதற்கு 21 நாட்களுக்கு குறையாத கால எல்லையை வழங்குவதற்கும் ஆனையாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(4) மேலே (2) ம் உப பிரிவின் பிரகாரம் நீதிபதி நீதிமன்றத்திற்கு வேண்டுகோளைசமர்ப்பிக்கும் போது, ஒப்பந்ததிதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துகளில் அல்லது பொருட்களில் அல்லது நிதியில் அல்லது பெறுமதிக்கு மேலதிகமாக பெறுமதியின் 25% வீதத்தை கட்டணமாகவும் நிர்வாக செலவாகவும் அறவிடுவதற்கான வேண்டுகோளை சமர்ப்பிக்காம்.

(5) மேலே (2) ம் உப பிரிவின் பிரகாரம் நீதிமன்றத்திற்கு வேண்டுகோளை சமர்ப்பித்த பின் மீள பெற்றுக்கொண்ட காணி, வீடு, பொருட்கள், மற்றும் பணத்தை தகுதியுள்ள வேறொரு பயன் பெறுபவருக்கு ஆணையாளர் வழங்குவாரேயானால் அது சட்டத்திற்கு ஏற்புடையதாகும்.

(6) மேலே (2) ம் உப பிரிவின் பிரகாரம் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் நீதிமன்றத்தால் அறவிடப்படும் சகல பணமும் வீடு அபிவிருத்தி கணகசில் வைப்பிலிடவேண்டும்.

## III ஆம் பகுதி

### பொது நிபந்தனைகள்

சொத்து சுவீகரித்தலும் நட்டஈடு வழங்கலும்.

13. (1) இந்த நியதிச்சட்டத்தின் பணிகளுக்காக எந்தவொரு காணியையோ அல்லது அந்த காணியில் தொடர்பை அல்லது தேவையென்றால் அந்த காணியை அல்லது தொடர்பை (460 வது பிரமாணத்திலுள்ள) காணி சுவீகரிக்கும் சட்டத்தின் அடிப்படையில் ஊவா மாகாண சபைக்கு பதிலாக அரசாங்கம் சுவீகரிக்கலாம்.

(2) இந்த நியதிச்சட்டத்தின் பணிகளுக்காக மாகாணத்திற்குள் ஒரு அரச காணி தேவைப்படும் சந்தர்ப்பத்தில் அரசியலமைப்பு சட்டத்தில் 13 ம் திருத்தச்சட்டத்தில் 11 ம் பகுதியில் 1.1.2 பிரிவின்படி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(3) காணி சுவீகரித்தல் அல்லது வேறு ஏதோ ஒரு விடயம் தொடர்பாக செலுத்தவேண்டிய நட்டஈட்டு தொகையை கணக்கெடுக்கும் போது (460 வது பிரமாணத்திலுள்ள) காணி சுவீகரிக்கும் சட்டத்தின் அடிப்படையில் நட்டஈட்டு வழங்கவேண்டும். அதற்கான செலவுகளை மாகாண சபை நிதியம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

(4) இந்த நியதிச்சட்டத்தின் பணிகளுக்காக பொருத்தமான ஒரு காணியை தெரிவுசெய்து இனம் கண்டதும், அமைச்சர் அமைச்சரவையில், மாகாண சபையில், ஆளுநரின் அங்கீகாரம் பெற்றுக்கொண்ட பின் காணி சுவீகரிக்கும் பணியை ஆரம்பிக்கவேண்டும்.

(5) மேலே (1) அல்லது (2) வது உப பிரிவின் அடிப்படையில் சுவீகரிக்கப்பட்ட ஒரு காணியை வீடு அபிவிருத்திற்கான விடயங்களை தவிர்த்து வேறு எக்காரியத்திற்கும் ஈடுபடுத்தக்கூடாது.

சொத்துகளை கையளித்தல்.

14. (1) ஒரு காணியை அல்லது ஒரு வீட்டை இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் ஒரு பயன் பெறுபவருக்கு வழங்கியதும், அந்த சொத்தின் பெறுமதியை பயன் பெறுபவர் மாகாண சபைக்கு ஆணையாளர் அறிவித்தது போல் தவணை முறையில் அல்லது ஒரேயடியாக செலுத்தலாம்.

(2) மேலே (1) ம் உப பிரிவின் அடிப்படையில் வழங்கப்படும், சொத்தின் முழு பெறுமதியையும் மீள பெற்றுக்கொண்டதும் அந்த சொத்துக்கான உறுதியையும் நொத்தாரிசு மூலம் எழுதி கையொப்பமிட்டு உரியவருக்கு கொடுத்து, அதன் உரிமையை ஆணையாளர் வழங்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(3) மேலே (2) ம் உப பிரிவின் பிரகாரம் காணியின் உறுதியை வழங்கவேண்டுமாயின், அங்கு வீட்டை கட்டி முடித்திருக்கவேண்டும்.

கட்டளைகள்.

15. (1) இந்த நியதிச்சட்டத்தின் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றிக்கொள்வதற்கும், இலக்கை அடைவதற்கும், அதன் நடவடிக்கைகளை முறையாக நிர்வகிப்பதற்கு தேவைப்படும் பொருத்தமான மற்றும் அதற்குறிய உத்தரவுகளை அமைச்சர் பிறப்பிக்கலாம்.

(2) அமைச்சரால் பிறப்பிக்கப்படும் உத்தரவுகள் வர்த்தமானிளில் வெளியிடப்படவேண்டும்.

(3) அவ்வாறு வர்த்தமானியில் வெளியிடப்படும் உத்தரவுகள், வெளியிடப்பட்ட தினத்தில் இருந்து அல்லது அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் தினத்தில் அதன் பின் குறிப்பிட்ட நாளிலிருந்து செயல்படும்.

(4) வர்த்தமானியில் வெளியிடப்ப்ட்ட பின் அந்த உத்தரவுகளுக்குக்கான மாகாண சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு, அமைச்சர் மூலம் மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(5) மேலே (4) ம் உப பிரிவின் அடிப்படையில் மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்படும் உத்தரவுகளுக்கு மாகாண சபையின் அங்கீகாரம் கிடைக்காவிட்டால் அதையும் வர்த்தமானியின் மூலம் பொது மக்களுக்கு அறியத்தருவது அமைச்சரின் பொறுப்பாகும்.

(6) மேலே (3) ம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தமானியில் வெளியிடப்பப்பட்ட பின் மற்றும் (5) வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தலை வெளியிடும், இடைப்பட்ட காலப்பகுதியையும் அந்த உத்தரவின் அடிப்படையில் செய்த காரியத்தையும் சட்டத்திற்கு முரணான காரியமாக கருத்தில் கொள்ளக்கூடாது.

பொருள் போடல்.

16. இந்த நியதிச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சொற்பதங்கள் தொடர்பாக வேறு அர்த்தங்கள் தேவைப்பட்டாலொழிய, "மாகாணம்" என்பது பதுளை மற்றும் மொனராகலை என்று இரு மாவட்டங்களினால் உருவாக்கப்பட்ட ஊவா மாகாணம் மாகாண சபை என்பது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணமாகும்.

"ஆளுனர்" என்பது ஊவா மாகாண ஆளுனராவும்,

" அமைச்சர்" என்பது ஊவா மாகாண சபையில் வீடமைப்பு அபிவிருத்தி விடயத்துக்கு பொறுப்பானஅமைச்சர்.

" செயலாளர்" என்பது ஊவா மாகாண சபையின் வீடமைப்பு அபிவிருத்தி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர்,

"ஆணையாளர்" என்பது ஊவா மாகாண சபையின் வீடமைப்பு அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர்,

" திணைக்களம்" என்பது ஊவா மாகாண சபையின் வீடமைப்பு அபிவிருத்தி திணைக்களத்தின் அல்லது வீடு அபிவிருத்தி பணிகளை நிறைவேற்றும் நோக்கில் நிறுவப்பட்டிருக்கும் ஒரு பிரிவு அல்லது அலகு,

"கணக்கு" என்பது ஊவா மாகாண சபை வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சு, வீடமைப்பு அபிவிருத்தி நோக்கத்துடன் திறக்கப்பட்டிருக்கும் வீடு அபிவிருத்தி வங்கி கணக்கு,

"சங்கம்" என்பது வீடமைப்பு அபிவிருத்தி பணிகளுக்காக, பொது மக்களின் பங்களிப்புடன் அமைக்கப்பட்டிருக்கும் வீடமைப்பு அபிவிருத்தி சங்கம் என பொருற்படும்.

17. இந்த நியதிச்சட்டத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில பொருற்பதங்களுக்கிடையில் முறண்பாடு தோன்றினால் சிங்கள மொழியிலுள்ள மூல வாக்கியங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும். தெளிவின்மை தோன்றினால் சிங்கள மூலவாக்கியங்கள் அமுல்படுத்தப்படல் வேண்டும்.

2-49/3

---

## ஊவா மாகாணத்தின் மாகாண சபை

## ஊவா மாகாணத்தின் மாகாண சபையில் 2010 ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க ஊவா மாகாண சமூக சேவைகள் நியதிச் சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண சபையால் 2010, டிசம்பர் மாதம் 09 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2010, டிசம்பர் 30 ஆந் திகதி கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவரது கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.

கே. டி. சிறிசேன,
மாகாண சபை செயலாளர்,
ஊவா மாகாண மாகாண சபை.

ஊவா மாகாண சபை செயலாளர் அலுவலகம்,
ராஜவீதி, பதுளை.
2011, ஜனவரி மாதம் 05 ஆம் திகதி.

## பகுதி I

### ஊவா மாகாணத்தின் 2010 ஆம் ஆணடின் 8 ஆம் இலக்க சமூக சேவைகள் நியதிச் சட்டம்

ஊவா மாகாணத்தினுள் வாழ்கின்ற அநாதரவான நபர்களையும் குடும்பங்களையும் புனர்வாழ்வுக்கு உட்படுத்தல், வறுமையான மற்றும் நிர்க்கதியான மக்களுக்கு நிவாரணம் அளித்தல், வாழ்வாதார தொழிலொன்றில் ஈடுபட முடியாத நிலையிலுள்ள சயரோகம், புற்றுநோய் தொழுநோய், தெலசீமியா, சிறுநீரக நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு உதவி வழங்குதல், உடல் உளரீதியாக மற்றும் சமூக ரீதியாக பாதிக்கப்பட்டவர்களை புனருத்தாரணம் செய்தல் மற்றும் அவர்களுக்கான நலன்புரி சேவைகள், உடற் குறைபாடுடையவர்கள் மற்றும் தொழிலில் ஈடுபட இயலாதவர்களுக்கு நிவாரணம் வழங்குதல் பயங்கரவாத மற்றும் இனவாத நடவடிக்கைகளினால் மரணமெய்தியவர்கள் அல்லது சிவில் யுத்தமொன்றின்போது அல்லது இயற்கையாக ஏற்படக்கூடிய பாரிய விபத்து காரணமாக அங்கவீன நிலைக்கு உட்பட்டவர்களுக்கு உதவிகள் வழங்குதல் உட்பட்ட நலன்புரி சேவைகளை வினைத்திறனுடன் கொண்டு நடாத்துவதற்கும் ஊவா மாகாணத்துக்குள் புதிய சமூக அபிவிருத்தி பிரவேசமொன்றினை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான ஒரு நியதிச் சட்டமாகும். இது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையினால் இவ்வாறு பிரகடனப்படுத்தப்படுகிறது.

*சுருக்கப் பெயரும் அமுலுக்கு வரும் திகதியும்.*

1. இந் நியதிச் சட்டமானது 2010 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கம் கொண்ட ஊவா மாகாண சபையின் சமூக சேவைகள் நியதிச்சட்டம் என அறிமுகப்படுத்தப்படுவதுடன், ஊவா மாகாண ஆளுநரின் அங்கீகாரம் பெறப்பட்ட தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும்.

*நியதிச் சட்டத்தின் நோக்கங்கள்.*

2. இந் நியதிச் சட்டத்தின் நோக்கங்கள் கீழ்க் கண்டவாறு அமையும்.

2. 1 ஊவா மாகாணத்தினுள் குடியிருக்கும் நலன்புரி சேவைகள் வழங்கப்பட வேண்டிய வறுமையான, நிர்க்கதியான நபர்களுக்கு உதவிகளும், நிவாரணங்களும் வழங்குதல் மற்றும் அவர்களுக்கு புனர்வாழ்வளித்தல்.

2. 2 குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் உள்ள உடல், உள மற்றும் சமூக ரீதியாக பாதிக்கப்பட்ட வர்களுக்கும், நிர்க்கதியான மூத்த பிரசைகளுக்கும் பாதுகாப்பு வழங்குதல் மற்றும் புனர்வாழ்வளித்தல்.

2. 3 உடல், உள மற்றும் சமூக ரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்காகவும், மூத்த பிரசைகளுக்காகவும் கொண்டு நடாத்தப்படுகின்ற சுயேச்சையான நிறுவனங்களுக்கு உதவிகள் வழங்குதலும், அவற்றை மேற்பார்வை செய்தலும்.

2. 4 பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் இனவாத நடவடிக்கைகள் காரணமாக மரணித்தவர்களுக்காகவும், சிவில் யுத்தமொன்றின்போது அல்லது இயற்கை அனர்த்தங்களினால் வலுவிழந்த நபர்களுக்காகவும் வருமான எல்லையைக் கருத்திற்கொள்ளாது ஆதார உபகரணங்களையும், பண உதவிகளையும் வழங்குதல்.

2. 5 பாடசாலைப் பிள்ளைகள், தர்ம பாடசாலைப் பிள்ளைகள், விதவைகள், மணமுடிக்காத பெண்கள், சிறைக்குச் சென்றவர்களின் குடும்ப உறுப்பினர்கள், வலுவிழந்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள், சமூகத்தின் பாதுகாப்பை இழந்து நிர்க்கதியாகவுள்ளவர்களின் குடும்ப அங்கத்தவர்கள், ஆகியோரை நோக்கமாகக் கொண்டு பல்தரப்பட்ட சமூக அபிவிருத்தி வேலைகள் நிறைவேற்றப்படுவதன் மூலம் அவர்களை சமூகமயப்படுத்தல் மற்றும் கலாசார விழுமியங்களை பேணிப் பாதுகாப்பதற்கான பல வேலைத் திட்டங்களை உருவாக்கல், நிறைவேற்றல்.

2. 6 அநாதரவான, நிர்க்கதியான மற்றும் கைவிடப்பட்ட பிள்ளைகள் மற்றும் சமூகப் பாதுகாப்பினை இழந்த பிள்ளைகள் தொடர்பாக சமூக அபிவிருத்தி செயற்திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்துதல்.

*மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தை உருவாக்கல்.*

3. இந் நியதிச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தற்போது அமைக்கப்பட்டுள்ள ஊவா மாகாண சமூக சேவைகள் திணைக்களம் என அழைக்கப்படும் (இதில் இனிமேல் திணைக்களம் என்று குறிப்பிடப்படும்) நிறுவனத்திற்கு கீழ்க்காணும் கைங்கரியங்களை நிறைவேற்றுவதற்குத் தகுதியுள்ள பொருத்தமான அதிகாரிகள் ஊவா மாகாண ஆளுநர் அவர்களால் நியமிக்கப்படக்கூடும்.

*ஊவா மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் மற்றும் ஆளணி சபையும்.*

3. 1 இதில், இதன் பின்னர் பணிப்பாளர் எனக் குறிப்பிடப்படுகின்ற ஊவா மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் இதன் தலைவராவார். ஊவா மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் இலங்கை நிர்வாக சேவையின் II ஆம் தர வகுப்பு அலுவலராக இருக்க வேண்டியதுடன் ஊவா மாகாண ஆளுநர் அவர்களால் நியமிக்கப்படுவார். மேலும், பதுளை மொணராகலை ஆகிய இரு மாவட்டங்களுக்காகவும் பிரதிப் பணிப்பாளர்கள் இருவர். ஊவா மாகாண ஆளுநர் அவர்களால் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் இலங்கை நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பு அலுவலர்களாக இருக்க வேண்டும்.

3. 2 திணைக்களத்தின் ஆளணியினரை நியமித்தல், இடமாற்றம் செய்தல், சேவையிலிருந்து நீக்கல், கடமைகளில் ஒழுக்காற்று நடவடிக்கைகளை நிர்வகித்தல் மற்றும் தோன்றக் கூடிய விடயங்கள் சம்பந்தமாக 1987 இன் 42 ஆம் இலக்கம் கொண்ட மாகாண சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஊவா மாகாண ஆளுநரும்

ஊவா மாகாண அரச சேவை ஆணைக்குழுவும் மேற்கொள்ளும் அதிகாரங்களை ஒப்படைத்தலும் பொருத்தப்பாடு உடையதாகும்.

4. இத் திணைக்களத்தின் கடமைகளும், பொறுப்புகளும் பின்வருமாறு அமையும். திணைக்களத்தின் பொறுப்புகள்.

4. 1 வறுமையான குடும்பங்களுக்கு மக்கள் உதவிக் கொடுப்பனவுகளை மாதாந்தம் வழங்குதல்.

4. 2 இந் நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய அமைச்சரினால் பிறப்பிக்கப்படும் கட்டளைகள் ஊடாக தீர்மானிக்கப்படுகின்ற நோய்களுள்ள நபர்களுக்கு உதவி வழங்குதல்.

4. 3 திடீர் அனர்த்தங்களுக்கு உட்பட்டு அநாதரவான நிலைக்குத் தள்ளப்பட்டவர்களுக்கும், குடும்பங்களுக்கும் உதவுதலும் அவர்களுக்கு புனர்வாழ்வு அளித்தலும்.

4. 4 குடும்பத்தினதும், சமூகத்தினதும் பாதுகாப்பை இழந்த மூத்த பிரஜைகளுக்கு முதியோர் இல்லங்களையும் அல்லது பாதுகாப்பு நிலையங்களையும் அல்லது நிறுவனங்ளை அமைத்து அவற்றைக் கொண்டு நடாத்துதலும் அவர்களுக்கு புனர்வாழ்வு அளித்தலும்.

4. 5 சமூகத்தின் பாதுகாப்பு தேவைப்படுகின்ற, மெதுவாக மனவளர்ச்சி அடைகின்ற பிள்ளைகளுக்கும், உடற்குறைபாடுள்ள பிள்ளைகளுக்கும் பாதுகாப்பு இல்லங்கள் அல்லது நிறுவனங்கள் அமைத்து, கொண்டுநடாத்துதல் மற்றும் அவர்களுக்காக விசேட பாடசாலைகள் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றைக் கொண்டுநடாத்துதல் ஆகியன ஊடாக அவர்களை மாகாணத்தின் அபிவிருத்திக்குப் பங்காளிகளாக்குதல் மற்றும் புனர்வாழ்வளித்தல்.

4. 6 கேட்டல், பார்த்தல், பேசுதல் போன்றவற்றில் ஊனமுடைய பிள்ளைகளுக்கு தேவையான விசேட பாடசாலைகள் அமைத்து அவர்களின் கல்வி நடவடிக்கைகளை முறைமுகமாக நடாத்திச் செல்லுதல், அவர்களின் பாதுகாப்பிற்காக இல்லங்கள் மற்றும் நிறுவனங்கள் அமைத்து, கொண்டுநடாத்துதல், அவர்களுக்கு கல்வியினைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் அவர்களை மாகாண அபிவிருத்தியில் பங்குபெறச் செய்தல்.

4. 7 தற்போது வதிவிடங்களில் இருக்கும் மற்றும் சமூகத்தின் பாதுகாப்பை இழந்து அநாதரவாக இருக்கும் முதியோர்களுக்கும், பல்வேறு குறைபாடுகளைக் கொண்ட பிள்ளைகளுக்கும் குடும்பத்தின் பாதுகாப்பை பெற்றுக்கொள்ளக்கூடிய செயற்திட்டங்கள் தீட்டுதல் மற்றும் செயற்படுத்தல்.

4. 8 (i) பயங்கரவாதம் மற்றும் இன வன்செயல்கள் மூலம் மரணமடைந்த நபர் தொடர்பாக, குடும்ப வருமானத்தைக் கவனத்தில் கொள்ளாது விடயப்பொறுப்புடைய அமைச்சரின் கட்டளையின் பேரில் தீர்மானிக்கப்பட்ட தொகைப்பணத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

(ii) பயங்கரவாதம் மற்றும் இன வன்செயல்கள் மூலமோ மிக விசேட சந்தர்ப்பம் ஒன்றிலோ அல்லது பாரிய இயற்கை அனர்த்தங்களினாலோ ஊனமடையும் மற்றும் அநாதரவான நிலையினை அடையும் நபருக்காக உபகரணங்களையும், உதவிகளையும் ஊவா மாகாண சமூக நலன்புரி சேவைகள் அமைச்சின் செயலாளரினது அங்கீகாரத்துடன் குடும்ப வருமான நிலையைக் கவனத்தில் கொள்ளாது தேவையான உதவிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

4. 9 உதவி தேவைப்படும் வறுமையான குடும்பங்களைச் சேர்ந்த ஊனமுற்ற அங்கத்தவர்களுக்கு மூக்குக் கண்ணாடி, செவிப்புல உபகரணம், சக்கர வண்டி, முச்சக்கர கதிரை, கைத்தடி, நடப்பதற்கு உதவும் ஊன்றுகோல், விழியுறை போன்றவற்றை வழங்குதல்.

4. 10 முதியோர் மற்றும் சிறு ஊனங்களுக்கு உட்பட்டவர்களை தங்குமிட வசதியும், பாதுகாப்பும் அளித்து கவனித்துக்கொள்ளும் பதிவு செய்யப்பட்ட சுயேட்சையான சங்கங்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு அவற்றைக் கொண்டு நடாத்துவதற்கு உதவுதொகைகளை வழங்குதல், அத்தகைய நிறுவன அபிவிருத்திக்காக உதவி வழங்கி ஊக்குவித்தல்.

4. 11 சமூக ரீதியாக நிர்க்கதியானவர்கள், நிர்க்கதியாகக் கூடிய நபர்கள் அல்லது குடும்பங்களை இனங்கண்டு அவர்களைப் புனருத்தாரணம் செய்வதற்குத் தேவையான சேவைகளை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

4. 12 சமூகத்தில் பல்வேறு காரணங்களினால் உள ரீதியில் பாதிப்படைந்த அல்லது பாதிப்படையக் கூடிய நபருக்கு அல்லது குடும்பத்துக்கு ஆலோசனை சேவைகள் வழங்கல், அதன் மூலம் அவர்களைப் புனர்நிர்மாணம் செய்தல், அதற்கான ஆலோசனை நிலையங்களை அமைத்து நடாத்திச் செல்லுதல்.

4.13 மேலே 2 ஆவது பந்தியின் நோக்கங்களுக்கு அமைவாக விசேட கல்வி, பரிசோதனை, ஆய்வுகள் போன்றவற்றை நடாத்துதல், சமூக விரோத செயல்களைக் குறைப்பது தொடர்பான வேலைத் திட்டங்கள், கருத்தரங்குகள் நடாத்துதல் போன்ற வேலைத் திட்டங்களை செயற்படுத்தி மீளாய்வு செய்தல்.

4.14 முதியோர்கள் மற்றும் குறைபாடுகளைக் கொண்ட நபர்கள் இருக்கும் குடும்பங்களின் அங்கத்தினர்கள், சிறைக்குச் சென்றவர்களின் குடும்ப அங்கத்தினர்கள், விதவைகள் மற்றும் திருமணமாகாத வயோதிபர்கள், சமூகத்தின் பாதுகாப்பை இழந்து அநாதரவான நிலையில் உள்ள குடும்பங்களின் அங்கத்தினர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட சமூகத்தின் இளைஞர்களை மையமாகக் கொண்டு பலவித செயற்திட்டங்களை அமுல்படுத்தலின் ஊடாக சமூக நல்லொழுக்கங்களைப் பேணல் பாதுகாப்பு மற்றும் சமூக அபிவிருத்தியைக் கருதி வேலைத் திட்டங்களை உருவாக்குவதன் மூலம் மானசிக, பொருளாதார, சமூக ரீதியில் அவர்களை வலுப்படுத்தல்.

*திணைக்கலத்தின் அதிகறுககள்.*

5. இந் நியதிச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள செயற்பாடுகள், நோக்கங்களை அடைவதற்குத் தேவையான தகவல், அறிக்கை என்பவற்றை சமூக சேவைகள் பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரால் கேட்கப்பட்டால், எந்த நிறுவனமும், அல்லது நபரும் கேட்கப்பட்டவற்றை பணிப்பாளருக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

5.1 சமூக சேவைகள் பணிப்பாளர் அல்லது அவரால் அனுமதி வழங்கப்பட்ட ஒரு பிரதிநிதி ஊவா மாகாணத்தினுள் செயற்படும் எந்தவொரு முதியோர் இல்லத்திற்குறள், ஊனமுற்றோருக்காக செயற்படும் இல்லத்திற்குள், அல்லது சமூக சேவைகள் தொடர்பாக செயற்படும் நிறுவனத்திற்குள் முன்னறிவிப்பு இன்றி, எச்சந்தர்ப்பத்திலும் உட்பிரவேசித்து, இந் நியதிச் சட்டத்தின் மூலம் ஆற்றப்பட வேண்டிய கருமங்களைப் பரிசீலிப்பதற்கு, விசாரணை செய்வதற்கு, ஆய்வு செய்வதற்கு, தேவைப்பட்ட ஆவணங்களை அவ்விடங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு மற்றும் எந்தவொரு சட்டரீதியான மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு அதிகாரமுண்டு.

*கொண்டு நடாத்தப் படுகின்ற இல்லங் களையும், நிறுவனங் களையும் பதிவு செய்தல்.*

6. இல. 04 ஆம் உபபிரிவில் கூறப்படும் கருமங்களை நிறைவேற்றுவது தொடர்பாக ஊவா மாகாணத்தினுள் சொந்த விருப்பின் பேரில் நடாத்தப்படுகின்ற விடுதிகள், சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் அனைத்தும் ஊவா மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்படல் வேண்டும். அத்தோடு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக நடாத்திச் செல்லப்படுகின்ற விடுதி அல்லது நிறுவனமாயின் சமூக சேவைகள், சமூக நலன்புரி சேவைகள் அமைச்சின் அரச சார்பற்ற நிறுவனங்களைப் பதிவு செய்யும் செயலகத்தில் பதிவுகளை மேற்கொண்டதன் பின்னர் ஊவா மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்படல் வேண்டும்.

*ஊவா மாகாண சமூக சேவைகள் நிதிக்கணக்கு.*

7. இந்நியதிச் சட்டத்தின் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக ஊவா மாகாண சமூக சேவைகள் நிதிக் கணக்கு என கணக்கொன்றை ஆரம்பித்து நடாத்திச் செல்ல முடியும்.

*நிதியக் கணக்கின் நோக்கங்கள்.*

7.1 நிதியக் கணக்கு ஆரம்பிப்பதன் நோக்கங்கள்.

(i) நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு தொடர்பான உதவிகளை வழங்குதல்.

(ii) குறைந்த வருமானமுள்ள ஊனமுற்ற, வாழ்விடம் இழந்த நபர்களை புனருத்தாரணம் செய்தல், அவர்களுக்கு பணமாக அல்லது வேறு வகையாக உதவி வழங்குதல், உள்நாட்டு வைத்திய வசதிகளைப் பெற இயலாத சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு வைத்திய வசதிகளைப் பெற்றுக்கொடுக்க உதவுதல்.

(iii) பதிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள், ஊனமுற்றோர், வாழ்விடங்களை இழந்தவர்கள் ஆகியோருக்கான இல்லங்களுக்கு மற்றும் பகற்பாதுகாப்பு நிலையங்களுக்குமான உதவி களை வழங்குதல்.

(iv) பயங்கரவாத மற்றும் இன வன்செயல்கள் ஏற்பட்டால் அதன் காரணமாக அல்லது விசேட சந்தர்ப் பங்களினால் அல்லது இயற்கையாக ஏற்படக் கூடிய பாரிய அனர்த்தங்கள் காரணமாக அநாதரவான நிலைக்கு உட்பட்ட நபர்களையும், குடும்பங்களையும் புனருத்தாரணம் செய்தல்.

(v) திடீர் அனர்த்தம் காரணமாக அநாதரவான நிலைக்கு ஆளாவோருக்கு உதவி வழங்குதல்.

(vi) ஊனமுற்ற பெற்றாரின் பிள்ளைகள், ஊனமுற்ற பிள்ளைகள் மற்றும் வறுமையான, நிர்க்கதியான குடும்பங்களிலுள்ள பிள்ளைகளின் உயர் கல்வி நடவடிக்கைகளின் போது தேவையான உதவிகள் வழங் குதல், வறுமையான மற்றும் நிர்க்கதியான குடும்பங்களிலுள்ள பிள்ளைகளின் ஆரம்பக் கல்வி நடவடிக்கைகளுக்காக பொறுப்புச் சபையின் மூலம் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அமைய நிதி உதவி வழங்குதல்.

(vii) குறை வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள நோயாளருக்கு, விசேட நோய்களுக்கும், சத்திர சிகிச்சைகளுக்கும் உரிய நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்களின் வைத்தியச் சான்றிதழ்களின் பேரில்

உதவி வழங்குதல் மற்றும் அதற்கான பரிகாரங்களுக்காக சமூகமளிக்கும்போது நிவாரணம் வழங்குதல்.
நிதியக் கணக்கு நிர்வாகம்.

7.2 (i) மாகாண சமூக சேவைகள் நிதியக் கணக்கை நிர்வகிப்பதற்காக பொறுப்புச் சபை ஒன்று நியமிக்கப்படல் வேண்டும். அதில் பதவி வழி அங்கத்தவர்கள் மூவரும், நியமனம் பெறும் பிரதிநிதிகள் இருவரும் அடங்குவர்.

(ii) ஊவா மாகாணத்தின் சமூக சேவைகள், சமூக நலன்புரி அமைச்சின் செயலாளர், அவ்வமைச்சின் கணக்காளர், ஊவா மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் பதவிவழி அங்கத்துவம் பெறுவதோடு, அமைச்சரால் நியமிக்கப்படுகின்ற தமிழ், முஸ்லிம் சமூகங்கள் சார்பாக ஒவ்வொரு அங்கத்தவர் வீதம் பதவி வழியற்ற இருவரும் நியமிக்கப்படுவர். (பதவி வழி அங்கத்தவர்கள் தமிழ், முஸ்லிம்களாக அமையும் பட்சத்தில் பௌத்த கிறிஸ்தவ அங்கத்தவர்கள் இருவர் நியமிக்கப்படல் வேண்டும்.)

(iii) நியமனம் பெறும் அங்கத்தவர்களின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாகும். மூன்று ஆண்டுகள் முடிந்த பின்னர் அவர்கள் மீண்டும் நியமிக்கப்படலாம்.

(iv) பதவிவழி அதிகாரத்தின் ஊடாக மாகாண சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் நிதியத்தின் தலைவர் ஆவதோடு, மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் செயலாளர் ஆவார். அவ்வமைச்சின் கணக்காளர் பதவிவழி அதிகாரத்தின் ஊடாக பொறுப்புச் சபையின் பொருளாளர் ஆவார்.

(v) பொறுப்புச் சபை குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது கூட வேண்டும். பொறுப்புச் சபையின் கூட்டங்கள்.

(vi) அ) அங்கத்தவர்களில் மூன்று பேர் சமுகமளித்திருந்தால் அது கூட்டத்திற்குத் தேவையான பெரும்பான்மை எனக் கொள்ளப்படும். கூட்ட நடப்பெண்ணும் பிரேரணையை அங்கீகரித்தலும்.

ஆ) சமுகமளித்துள்ள அங்கத்தவர்களில் அரைவாசிக்கு மேல் விருப்பம் தெரிவித்தாலன்றி எந்தவொரு பிரேரணையும் பொறுப்புச் சபையின் அங்கீகாரம் பெற்றதாகக் கருதப்படமாட்டாது.

(vii) பொறுப்புச்சபைக் கூட்டத்தைக் கூட்டுவது சபையின் செயலாளரது பொறுப்பாவதுடன், கூட்டங்களின் அறிக்கைகளை தயாரித்து, பேணுவது செயலாளரது கடமையாகும்.

7.3 இக் கணக்கிற்கு கிடைக்கும் பணம் கீழ்க்காணும் வகையினவாக அமையும். நிதிக்கணக்கில் அடங்குவன.

(i) அரசாங்கத்திடமிருந்து அல்லது ஊவா மாகாண சபையிடமிருந்து கிடைக்கப்பெறும் உதவுதொகை.

(ii) தனிநபர்களிடமிருந்து அல்லது நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெறும் உதவிகள்.

(iii) இலங்கை அரசாங்கத்தின் ஊடாக கிடைக்கும் வெளிநாட்டு உதவிகள்.

(iv) செய்யப்பட்ட சேவைகளுக்காக கிடைக்கப்பெறும் ஏனைய உதவிகள்.

(v) களியாட்டங்கள், சீட்டிழுப்புகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வேறு வழிகளினூடாகப் பெறப்படும் பணம்.

7.4 (i) பொறுப்புச் சபையின் பொருளாளரினால் கணக்குகள் பேணப்படுவதுடன், அதனூடாக நியமிக்கப்படுகின்ற கணக்காய்வாளரால் கணக்குகள் ஆய்வுக்குட்படுத்தப்படல் வேண்டும். இலங்கை சநநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154 ஆம் உப பிரிவிற்கமைய கணக்காய்வு அமைந்திருத்தல் வேண்டும். நிதியக் கணக்கு.

(ii) இக் கணக்கின் நிதியாண்டு, ஒவ்வொரு வருடமும் ஜனவரி 01 ஆம் திகதி முதல் டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியாகும்.

7.5 நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக விடயப்பொறுப்பு அமைச்சரின் மூலம் பொருத்தமான யாப்பொன்று தயாரிக்கப்படல் வேண்டும்.

7.6 இச்சபையின் அங்கத்தவர் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராகவோ அல்லது மாகாண சபை உறுப்பினராகவோ அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினராகவோ தெரிவு செய்யப்பட்டால், அவ்வாறான பதவியொன்றில் நியமனம் பெற்றால், தெரிவு செய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து குறித்த நபர் பொறுப்புச் சபையில் அங்கத்துவம் வகிக்கும் தகுதியினை இழந்துவிடுவார்.

7.7 இச்சபைக்கு நியமனம் பெற்ற அங்கத்தவர் ஒருவர் யாதேனும் ஒரு நீதிமன்றத்தில் குற்றவாளி எனத் தீர்மானிக்கப்படின், அல்லது சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர் எனத் தெரியவரின், அல்லது குற்றவாளி எனத் தீர்மானிக்கப்படின் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அந்நபரை அங்கத்துவத்திலிருந்து நீக்கிவிட வேண்டும்.

## பகுதி II

### குற்றங்களும் தண்டனைகளும்

08. எவரேனும் ஒருவர் நியதிச் சட்டத்தின் பிரமாணங்களை அல்லது அதன் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள பிரமாணங்களை மீறல், நிறைவேற்றாமை, கவனத்தில் கொள்ளாமை அல்லது இந் நியதிச் சட்டத்தின் மூலம் அல்லது அதன் பிரமாணங்களின் மூலம் பிறப்பிக்கப்பட்டுள்ள கட்டளைச் சட்டங்களுக்கமைய தனது கடமைகளை மேற்கொள்ளுகின்ற யாரேனும் ஒருவரை அக்கடமைகளை மேற்கொள்ளவிடாது இடையூறு விளைவித்தல், அல்லது குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக பிழையான தகவல்களை வழங்குதல் போன்ற காரியங்களில் ஈடுபடின் அவர் இந் நியதிச் சட்டத்தின் பிரகாரம் குற்றவாளியாவார்.

8.1 இந் நியதிச் சட்டத்தின் பிரகாரம் குற்றச் செயல்களில் ஈடுபடும் எந்தவொரு நபராவது விசாரணையின் பின்னர் குற்றவாளி என நீதவான் முன்னிலையில் நிரூபிக்கப்பட்டால் ரூபா 5,000/- ற்கு மேற்படாத அபராதம் அல்லது 6 மாதங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது அவை இரண்டுமே தண்டனையாக வழங்கப்படலாம்.

8.2 இந்நியதிச் சட்டத்தின் பிரகாரம் பிறப்பிக்கப்படும் கட்டளைகளை மீறல், கவனத்தில் கொள்ளாமை, கைவிடல், நியதிச் சட்டப்படி செயற்படாமை என்பவற்றில் ஈடுபடும் யாதேனும் ஒரு நிறுவனம் இருப்பின், அந் நிறுவனத்தின் செயற்பாடுகளை அமைச்சர் தடைசெய்ய இயலும்.

## பகுதி III

### பொதுச் சட்ட விதிகள்

அமைச்சரினால் கட்டளைகள் பிறப்பிக்கப்பட முடியும்.

9.1 நிர்ணயிக்கப்பட வேண்டுமென இந் நியதிச் சட்டத்தின்படி விதந்துரைக்கப்பட்டுள்ள அல்லது கட்டளை பிறப்பிப்பதற்கு இதன் மூலம் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அல்லது தேவைப்படக்கூடிய சகல விடயங்கள் தொடர்பாகவும் அமைச்சரினால் கட்டளைகள் பிறப்பிக்க முடியும்.

9.2 அமைச்சரினால் பிறப்பிக்கப்படுகின்ற சகல கட்டளைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டுவதுடன், அது பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அல்லது அக் கட்டளையின்படி திட்டவட்டமாகக் குறிப்பிடக் கூடிய திகதியிலிருந்து கட்டளைகள் அமுலுக்கு வரும். அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட சகல கட்டளைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் அங்கீகாரம் பெறுவதற்காக மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மாகாண சபையின் அங்கீகாரம் பெறாவிடின் அதுதொடர்பாகவும் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு பிரசுரிக்கும்போது அக்கட்டளைகளின் பிரகாரம், முன்பு ஆற்றப்பட்ட காரியங்களையும் கடப்பாடுகளையும் பாதிக்காத விதத்தில் முன்னைய கட்டளைகள் மாற்றங்களுக்கு உட்பட்டனவாக கருதப்படல் வேண்டும்.

9.3 யாதேனும் கட்டளையொன்று மாற்றியமைக்கப்பட்டதாக கருதப்படும் திகதி தொடர்பான அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும்.

நிதி ஒதுக்கீடு.

10. இந் நியதிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனங்களினை கொண்டுநடாத்துவதற்கு தேவையான நிதியினைப் பெற்றுக்கொடுத்தல், செலவு செய்தல் என்பன 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய இடம்பெறும்.

பொருள் கோடல்.

11. சொற்கள் தொடர்பில் மாற்றுக் கருத்து தேவைப்பட்டாலன்றி இந் நியதிச் சட்டத்தில் -

"அமைச்சர்" எனும் பதம் ஊவா மாகாண சபையின் சமூக சேவைகளுக்குப் பொறுப்பான அமைச்சரைக் குறிக்கும்.

"அமைச்சு செயலாளர்" என்பது ஊவா மாகாண சபையின் சமூக சேவைகள், சமூக நலன்புரி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரைக் குறிகும்.

"பணிப்பாளர்" என்ற பதம் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் கீழ் ஊவா மாகாணத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள சமூக சேவைகள் பணிப்பாளரைக் குறிக்கும்.

“தற்காலிகமான அனர்த்தம்” எனும் சொல், பாரிய அளவில் பரவிச் செல்லாத, தனிநபரால் கட்டுப்படுத்த முடியாத காரணத்தினால் ஏற்படும் சிறு இயற்கை அனர்த்தம் என்பதைக் குறிக்கும்.

“ஊனமுற்ற” என்பது இரு கைகளும் ஊனமுறல் இரு கால்களும் ஊனமுறல், ஊமை, செவிடு, மந்தபுத்தி நிலைமை என்பவற்றால் பாதிக்கப்பட்டவர்களையும், உடலுறுப்புகள் அசையாத தன்மை கொண்டவர்களையும், மனநிலை பாதிக்கப்பட்டவர்களையும் குறிக்கும்.

“வறுமை” என்ற பதம் தனிப்பட்ட ஜீவனோபாயத்திற்காக, அன்றாட வாழ்க்கைக்கு தேவையான அடிப்படைத் தேவைகளுக்கான உதவிகள் கிடைக்காவிடின் வாழ்க்கையை கொண்டு நடாத்த முடியாது எனக் கருதப்படுபவர்களைக் குறிக்கும்.

“நிதியக் கணக்கு” என்பதனால் இந் நியதிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் ஏற்படுத்தப்படும் நிதியக் கணக்கினைக் குறிக்கும்.

“பொதுமக்கள் உதவி” என்பது வருமான மார்க்கமற்ற வறுமையான வயோதிபர், நோயாளர், உடல் - உள ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் போன்றவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் பண உதவி என்பதனைக் குறிக்கும்.

“சுயேச்சை” என்ற பதம், பிரஜைகள் குழுக்களினால் பிரதிபலனை எதிர்பாராது, சமூக அபிவிருத்திக்காகவே அமைக்கப்பட்டதும், அரசாங்கத்தினது அல்ல என்ற நிலை கொண்டதும், தமது காரியங்களை ஆற்றிச் செல்லுகின்ற போது பொது மக்களின் நன்கொடைகள், அரசாங்கத்தினால் வழங்கப்படும் நன்கொடைகள், உள்நாட்டு வெளிநாட்டு நன்கொடைகள் ஆகியவற்றில் தங்கியிருப்போரும், உள, உடல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள், வறியவர்கள், அநாதரவானவர்கள் ஆகியோருக்கு வேண்டிய நிவாரணங்கள் வழங்கி வெளிவாரியான மற்றும் வதிவிட சேவைகள் வழங்குவதையும், இயற்கை அனர்த்தங்களின்போது நிவாரணங்கள் வழங்குவதையும் தமது நோக்கமாகக் கொண்டதொரு அமைப்பைக் குறிக்கும்.

12. இந் நியதிச் சட்டத்தில் சிங்களம், தமிழ் மொழிப் பதங்களில் யாதேனும் ஒவ்வாமை காணப்படின் சிங்கள மொழிப் பதம் வலுவுள்ளதாக அமையும்.

சிங்களம், தமிழ் மொழிகளில் ஒவ்வாமை காணப் படின் சிங்கள மொழிப் பதம் வலுப்பெறும்.

2- 49/4

---

## ஊவா மாகாணத்தின் மாகாண சபை

### ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2010 ஆம் ஆணடின் 9 ஆம் இலக்க ஊவா மாகாண அரசாங்க ஆணைக்குழுவின் தலைவருக்கும் மற்றும் அதன் உறுப்பினர்களுக்கும் சம்பளம் மற்றும் கொடுப்பனவு வழங்குவதற்காக திருத்திய நியதிச் சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண சபையால் 2010, நவம்பர் மாதம் 09 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் 2010, டிசம்பர் 24 ஆந் திகதி கௌரவ ஆளுநர் அவர்களினால் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள நியதிச் சட்டம் அனைவரது கவனத்துக்குமாக சமர்ப்பிக்கின்றேன்.

கே. டி. சிறிசேன,
மாகாண சபைச் செயலாளர்,
ஊவா மாகாண மாகாண சபை.

ஊவா மாகாண மாகாண சபைச் செயலாளர் அலுவலகம்,
ராஜவீதி, பதுளை,
2010, ஜனவரி 03 ஆம் திகதி.

**2010 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊவா மாகாண பொது சேவை ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அங்கத்தவர்களுக்கும் வேதனம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான திருத்தப்பட்ட சட்டம்**

ஊவா மாகாண பொது சேவை ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு வேதனம் மற்றும் கொடுப்பனவு செலுத்துவது தொடர்பான திட்டம் 2002 இலக்கம் 01 கொண்ட மாகாண சபை வேதனம் மற்றும் கொடுப்பனவு செலுத்துவதற்கான திருத்தப்பட்ட சட்டம்.

இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

சுருக்கப் பெயர் மற்றும் செயற்படும் திகதி.

1. இந்த சட்டம் 2010 ஆம் ஆண்டின் இல. 9 கொண்ட ஊவா மாகாண பொது சேவை ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் வேதனம் மற்றும் கொடுப்பனவு செலுத்துவதற்கான திருத்தப்பட்ட சட்டம் என அறிமுகப்படுத்தப் படுவதுடன், ஊவா மாகாணத்தின் ஆளுநர் அவர்களுடைய அனுமதி கிடைத்த நாள் முதல் நடைமுறைக்கு வரும்.

ஊவா மாகாணத்தின் பொது சேவைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு மற்றும் உறுப்பினர்களுக்கு செலுத்தப்படும் வேதனம் மற்றும் கொடுப்பனவு.

2. இந் நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியும் அதற்கு பின்பு

அ. ஊவா மாகாண பொது சேவை ஆணைக்குழுவின் தலைவரின் மாதாந்த ஊதியமாக ரூபா பதினையாயிரம் (15,000.00) ஆகும்.

ஆ. ஊவா மாகாண பொது சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் மாதாந்த கொடுப்பனவாக ரூபா பத்தாயிரம் (10,000.00) செலுத்த வேண்டும்.

ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தல் மாகாண சபை நிதியத்திற்கு பொறுப்பானதாகும்.

3. இந் நியதிச்சட்டத்தின் கீழ் ஊவா மாகாண பொது சேவைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு மற்றும் உறுப்பினர்களுக்கு செலுத்தப்படும் கொடுப்பனவுகளை ஊவா மாகாண சபை நிதியத்திற்கு பொறுப்பானதாகும்.

நடைமுறைப்படுத்தப் படும் போது சிங்கள மொழி மூலமானதே ஏற்றுக்கொள்ளப் படும்.

4. இச் சட்டம் சிங்களம், தமிழ் மொழிகளில் உள்ளதுடன் ஏதாவது சிக்கல்கள் ஏற்படுமாயின் அப்போது சிங்கள மொழி மூலமானதே ஏற்றுக்கொள்ளப்படும்.

2- 49/5

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.